
# சிரித்திரு

ஆசிரியர்: 'துரைஸ்'

இவர்கள் அட்டையிலே அட்டகாசம் புரியும் அர்த்தம் புரியவில்லையா?




உள்ளே வாருங்கள்
ராகு பதில் தருவார்

ஐரோப்பாவின் முதல் தமிழ் நகைச்சுவை ஏடு

# சிரித்திரு

'SIBITTIRU'
90, PASSAGE BRADY,
PARIS - 75010
FRANCE.
TEL: 42 47 03 06





புதுமையான முறையில்....அழகிய வர்ணங்களில்
மங்களத்திருநாட்களுக்குரிய அழைப்பிதழ்கள்
விளம்பர பிரசுரங்கள் இன்னும் உங்கள்
தேவைக்குரிய அனைத்து அச்சுவேலைகளுக்கும்
விளம்பரபோட் பலகைகள்
வாழ்த்து மடல்கள் போன்றவை
தயாரித்து பெற்றுக்கொள்ளவும்
இன்றே நாடுங்கள்

அல்லாவும் ஜேசுவும்
ஆனைமுகக் கடவுளும்
சீல்லாமே ஒன்றுதான்
'சிரித்திரு' முன்னாலே
சிந்திக்கத் தெரிந்தோரே
சிரியுங்கள் என்னாளும்.

சிரித்திரு
முகம் : 1
சிரிப்பு : 2
இதழ் : வைகாசி
சகல தொடர்புகட்கும்:
'SIRITTIRU'
90, PASSAGE BRADY,
PARIS 75010
FRANCE
TEL: 42 47 03 06

சிரித்திருவில் வரும்
அனைத்து விஷயங்களும்
உங்களை சிரிக்கவும், சிந்திக்க
வைக்கவும்
எம் கற்பனையில்
உருவாக்கப்பட்டவையே

*

ஓவியங்கள்


கணேஷ்ராஜ்

*

பிரெஞ்சு - தமிழ்
கலைஞர்கள் நட்புறவு
பணிமனை வெளியீடு

ASSOCIATION ARTISTIQUE
AMICALE FRANCO-TAMOULE


மாதம் ஒருமுறை
மலரும் 'சிரித்திரு'
சிரிக்க சிந்திக்க
உங்களை அழைத்துச் செல்லும்
கலையார்வம் கொண்ட
உங்கள் தோழன்




வணக்கம் அன்பு உள்ளங்களே!
உங்கள் சிரித்திருவின் மூன்றெழுத்துக்களின் முகம் "துரைஸ்" மனம் விட்டு பேசுகின்றேன்.
நான் 85 ம் ஆண்டு ஐரோப்பிய நாட்டில் எனது முதல் முயற்சியான "நீதியின் சோதனை " வீடியோப்படத்தை தயாரித்து வெளியிடுவதற்கு எனது நண்பர்களும் ரசிகப்பெருமக்களும் எப்படி ஊக்கமும் ஆதரவும் வழங்கினார்களோ.... அதே போன்று ஏழு வருடங்களுக்குப்பின் இன்றும் சிரித்திரு பத்திரிகையை ஆரம்பித்த போதும் எனது நண்பர்களும் வாசகர்களும் பேராதரவு தந்து வரவேற்றிருப்பதை பார்த்து நான் நெஞ்சம் நெகிழ்கின்றேன். உங்கள் ஆதரவிற்கு நன்றியுடையவனாக இருக்கிறேன்.
முதலாவது இதழைப்பற்றி பல வாசகர்கள் தங்கள் கருத்துக்களையும் விமர்சனங்களையும் எழுதியிருக்கின்றார்கள்.
அதிகமான வாசகர்களின் கருத்து அட்டையின் அழகு போதாது என்பதே, பத்திரிகையின் விலை அதிகமாக உள்ளது என்பதும் தான்.
அழகில் தான் எல்லாமே அடங்கியுள்ளது என்பது எமக்கும் புரிகின்றது இப்போது அந்த குறையை இந்த இதழில் நிவர்த்தி செய்கின்றோம்.
மேலும் ஆக்கங்களின் தரமும் இந்த இதழில் உயர்ந்திருப்பதை 32 பக்கங்களையும் புரட்டும் போது உங்களுக்குத் தெரியவரும். ஆனால் விலை இறக்கம் செய்வதற்கு எம்மை பொருளாதார பூதம் தடுத்து நிறுத்துகின்றது.
அதே வேளையில் சரிக்குச் சரி விலை குறைத்து விற்கப்படும் இந்திய சஞ்சிகைகளின் போட்டியையும் நாம் சமாளிக்கவேண்டியிருக்கின்றன.
தரமான பொருளுக்கு சந்தையில் விலை ஒரு தடையாக இருக்காது என்று நாம் நம்புவதால் விலையில் மாற்றமெதுவும் இல்லை என்பதை உங்களுக்கு பணிவன்புடன் அறியத் தருகின்றோம்.
இடம் பெயர்ந்து வந்த நாங்கள் இதுவரை காலமும் கலை, இலக்கியம், சினிமா, அரசியல் என்று பற்பல விஷயங்களையும் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் படித்து வந்துள்ளோம். இன்று சிரிக்க சிந்திக்க வைக்க சிரித்திருவுடன் சேர்ந்து சிரித்திரனும் வந்திருப்பதில் வாசகர்களுடன் சேர்ந்து நாமும் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். ஏனெனில் திரு.சுந்தர் அவர்களின் அபிமான வாசகர்களே நாம்.
"நூறு மலர்கள் மலரட்டும் - நம்
தாகம் அதிலே தீரட்டும்"

- ஆசிரியர் -






**நந்தன் -பாரிஸ்**
கே: நண்பரே கொன்ரெக்ஸ் தண்ணிக்கும் கொணியாக்குக்கும் உள்ள வேறுபாட்டை உம்மால். விளக்கமுடியுமா எங்கே விளக்கும்



ப: விளக்கமுடியாது கொணியாக் போட்டு உம்மை உளக்கமுடியும்.

★

**கந்தவனம் - கார் டு நோட்**
கே: தம்பி, ராசா, ராகு நான் பாரிஸில் பலருக்கு நல்லா பல உதவிகள் செய்துள்ளேன் என் உதவிகளை பெற்ற பலர் இன்று நல்லாயிருக்கிறார்கள். ஆனால் நான் இப்ப கஸ்ரப்படுகிறேன் என்னை கணக்கெடுக்கிறார்களுமில்லை ஒரு ஆறுதல் வார்த்தை கூட சொல்கிறார்களில்லை. ஆனபடியால் உம்மிடம் ஏதேனும் ஆறுதல் வார்த்தையிருந்தால் சொல்லும்.
ப: திரும்ப எனக்கொருக்கா உதவி செய்து பாரும் பின்னடிக்கு நான் றை பண்றன்.

★

கே: காட்டிக்கொடுப்பவர்கள் பற்றி அதாவது ஒரு விசயம் தெரியாமலிருக்க அதைக் காட்டிக்கொடுப்பவர்கள் பற்றி?
ப: இரண்டாவது பப்பி தாட்டுப் போட்டிரே? பதட்டப்படுகிறீர்.

**ஆசீர்வாதம் -ஆர்ஜென்ரீல்**
கே: சிலரின் முயற்சிக்கு ஆசி கூறாதவர்கள் பற்றி?

ப: மனம் தான் காரணம்.

★

**வன்னியசிங்கம் - பாரிஸ்**
கே: பரிசில் என்னை எல்லோரும் கர்ணன் என்று சொல்கிறார்கள். ஆனால் என் காட் புளூவை மெஷின் விழுங்கிவிட்டது நான் என்ன செய்வது?



ப: காட்ட புளூவில் கர்ணன் என்று பேர் இருந்தால் கட்டாயம் விழுங்கிஇருக்காது.

★

**நாகேந்திரம் - லீயோன்**
கே: ராகு, மித்திரோன், சிராக், லூபென் இம் மூவரும் கேள்விகேட்டால் யார் கேள்விக்கு முதலில் பதில் அளிப்பீர்?

ப: இங்கேயும் பாஷைப் பிரச்னை தான்

★

**ந. சுந்தரலிங்கம் - கொலன்ற்**
கே: தலைவா அரைக்கிளாஸ் ஃபிளைக் அன்வைற்க்கு எவ்வளவு பெரியர் அல்லது கோலா கலக்கவேண்டும்?

ப: அங்காலையும் இஞ்சாலையும் பார்த்துப் போட்டு பச்சையா அடிச்சுவிடும்.

# கேள்வி பதில்

**ஞானம் பீரிஸ் - மெசன் அல்போட்**

கேள்வி: ராகு அவர்களே ! தங்களுடைய முதல் பத்திரிகையிலே 9 ம் பக்கத்தில் மொட்டைத் தலையுடன் ஆசிரியர் காட்சி தருகிறார். காரணம் ஏதோ?



பதில்: உள்ளது நாலு மயிர் இதில் மொட்டை என்ன முடி என்ன என்று நினைத்துவிட்டாரோ.

★

கே: ஐரோப்பிய நாடுகளில் பிள்ளைகளைவிட, நாய்களைப் பெண்கள் கூட விரும்புகின்றார்கள் காரணம் என்ன ?



ப: ஒரு இங்கிலாந்து கவிஞரின் கூற்றுப்படி இங்கிலாந்து பெண்கள் இரண்டு முறை தான் அழுவார்களாம். கணவன் இறந்த அன்றும், தாம் வளர்த்த நாய் இறந்தபோதும்.

★

கே: பாரிசில் உள்ள தமிழ் இளைஞர்களின் அறிவு எப்படி?



ப: அண்மையில் நான் பார்த்த அறிவுபூர்வமான விஷயம் ஒரு வயோதிபரின் மரண அறிவித்தல் விளம்பர பிரசுரம் இருந்ததை கண்டு விட்டார். இறந்தவர் யார்? ஏன் இறந்தார் என்பது அவருக்கு முக்கியமில்லை. ஆனால் விளம்பர பிரசுரத்தை கையிலை எடுத்து இறந்தவரின் படத்திற்கு தனது பேனாவினால் மீசையும் தாடியும் வைத்து ரசித்தார்..இது எப்படி இருக்கு?

கே: அன்பின் ராகு! ஆசைகள் ஐந்து வகை அவற்றுள் கொடுமையானது எது ?

ப: எனக்கு தெரிந்தது என்னவோ மூன்று ஆசை மண்ஆசை, பொன்ஆசை, பெண்ஆசை எல்லாம் தெரியவேண்டும் என்று ஏன் உமக்கு வீண்ஆசை.

**இலக்கிய நாதன், சுவிஸ்**

கே: இராமர், தான் இலங்கைக்கு போகாமல் அநுமானை அனுப்பியது இராவணனுக்கு பயந்து தானே?



ப: இது பழைய பிரச்சினை தான் கிளறவிரும்பவில்லை

★

கே: நான் மரணத்தில் ஒத்திகை பார்க்க விரும்புகிறேன் முடியுமா?

ப: இதற்கு ஏன் ஒத்திகை போய்ச் சேரவேண்டியது தானே

★

கே: சினிமா நடிகைகள் கனவில் வருகிறார்கள் இதனால் மெலிந்துவிட்டேன். இதற்கு என்ன செய்யலாம்?



ப: இனிமேல் தர்மத்தாய், கன்னித்தாயை நினைத்த வண்ணம் உறங்கும் புண்ணியமாக இருக்கும்.

**விஜயகுமார் - சார்சேல்**
கே: உங்களை செல்வி.பானுப்பிரியா திருமணம் செய்யக்கேட்டால் ஒத்துக்கொள்வீர்களா?



ப: குஷ்புவைக் கேட்டுப் போட்டுத்தான் சொல்லுவன்.

*

**செல்வி ஆர்.சியாமளா -ஜெர்மனி**
கே: என்னை ஒரு பொடியன் பின் தொடர்ந்து என்னை காதலிப்பதாக சொல்கிறான் ஆனால் எனக்கு அவன் மேல் காதல் இல்லை அவனை எப்பிடி காய் வெட்ட ஒரு வழி சொல்லுங்களேன்? அண்ணா



ப: தங்கச்சி நீ மறைக்கிறாய் அண்ணையிடம் ஒழிக்காதே

**சிலோன் லூாப்பென் - பாரிஸ் 12**
கே: ஏய் கமெறாத் நீ எந்த தொகுதி அகதி?

ப: மன்னிக்கவேண்டும் நான் இமிகிரண்ட் உம்மை பள்ளிக்கூடம் அனுப்பவேண்டும், புரிந்தால் சரி.

*

**மாணிக்கராஜா - மார்செயில்**
கே: என் மனைவி என்னை சோம்பேறி என்கிறாள் நான் என்ன செய்வது?



ப: மளமளவென்று இரண்டு மூன்று பிள்ளைகள் பெறும் மனைவியின் நச்சரிப்பும் குறையும் அலெக்கேஷனும் பிரிக்கும்.

*

**செந்தில் - பாரிஸ்**
கே: பேசும் படம், பொம்மை,சினிமா எக்ஸ்பிரஸ் இவைகளைவிட "சிரித்திரு" தரம் என்று என் நண்பனிடம் சொன்னேன் சரியா தலைவா?

ப: புல் அரிக்கிது. (சாம்பல் பூசவேண்டும், ஆனால் இங்கு எலக்றிக்சிஸ்டம்)

*

**எம். தவலிங்கம் - ஜெர்மனி**
கே: நீரும் நெருப்பும் இந்த உலகுக்கு தேவையெண்டால் கெட்டவனும் நல்லவனும் இந்த உலகுக்குத் தேவைதானே பின்னர் ஏன் கெட்டவனை எல்லாரும் வெறுக்கிறார்கள் ?

ப: பிரதர் தவலிங்கம் அர்த்தம் இல்லாத கேள்வி இருந்தும் ஏன் உம்மை கெட்டவன் என்று கற்பனை செய்து பார்க்கிறீர்.

*

**காந்தருபன் - டாரான்சி**
கே: தற்போது பிரான்சில் எம்மவர்களின் சமூக சேவை குறைந்து வருகிறதே ஏன் தோழா?

ப: ஏதோ முந்தி செய்த மாதிரி கேட்கிறீர்.

வாசகர்களே! உங்களின் எல்லாவிதமான கேள்விகளுக்கும் ராகு பதில் தரக் காத்திருக்கின்றார். கேள்வி ஈட்டி போல் பாய்ந்து வந்தாலும், பதில்கள் சிரிப்போடு சேர்ந்து உங்களை சிந்திக்கவைக்கும்

# சிரித்திரு

## பிறந்த நாளில்

*18. 04. 92 சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஓபர்விலியர்ஸ் வசந்தம் திரையரங்கில் பிரபல எழுத்தாளர் திரு. எஸ். அகஸ்தியர் மங்கள விளக்கேற்றி வைக்க 'பாரிஸ் ஈழநாடு' ஆசிரியர் திரு. எஸ். எஸ். குகநாதன் அவர்கள் விழாவை ஆரம்பித்து "சிரித்திரு"வின் முதலாவது இதழை வெளியிட்டுவைக்க ஈழநாடு நிர்வாகி திரு. சிவகுரு பாலசச்சந்திரன் பெற்றுக்கொண்டார்.*

**தலைமையுரையில் பாரிஸ் ஈழநாடு ஆசிரியர் எஸ்.எஸ்.குகநாதன்**

யாழ்ப்பாண மக்களின் கலாச்சார, பண்பாடு, நாகரிக மாற்றங்களை பிரதிபலிக்கின்ற நிறுவன மாக யாழ்ப்பாணத்தில் திகழ்ந்த நிறுவனம் "ஈழ நாடு". அந்த நிறுவனத்துக்கு நிகராக தனிஒரும னிதனாக நின்று அந்தப்பணியைச் செய்தவர் 'சிரித்திரன்' சுந்தர் அவர்கள்.

அந்தச் சிறப்புக்குரிய மனிதரின் 'சிரித்திரன்' சஞ் சிகையை நெஞ்சில் நிறுத்தி இன்று வெளிவரும் 'சிரித்திரு' ஐரோப்பிய தமிழ்மக்களின் பண்பாட்டு, கலாச்சார மாற்றங்களை பிரதிபலிக்கின்ற ஸ்தா பனமாக திகழவேண்டும்.

சிரித்திருவின் வரவை எதிர்பார்த்து பெரும் வாச கர் கூட்டமே திரண்டு வந்திருக்கிறது.இவையெல் லாம் இந்த சஞ்சிகை வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெறும் என்ற நம்பிக்கையை எனக்கு ஊட்டுகின்றது.

*

**முன்னாள் அதிபரும் முற்போக்கு சிந்த னையாளருமான திரு. சி. காராளபிள்ளை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில்.**

சிரிப்பு என்பது நோய் தீர்க்கும் சிறந்த மருந்து நோய்தீர கசப்பான மருந்துகளை குடிப்பதற்கு சிறிது இனிப்பு கலந்து அந்த கசப்பான மருந்து களை குடிப்பதுபோல, பலசிந்திக்கக்கூடிய கருத் துக்களை சிரிப்போடு தந்திருக்கின்றார்கள்.

இந்தப் புத்தகத்தில் ஒரு துணுக்கு ..ஒரு பொம்மை வியாபாரியிடம் இவ்வளவு அழகான பொம்மைகளை எப்படி செய்தீர்கள் என்று கேட் கின்றார், வியாபாரி சொல்கின்றார் எல்லாம் என் னுடைய மூளையை பாவிச்சுத்தான் என்று. களிம ண்ணிலும் எவ்வளவு திறமையான சாதனை களைபடைக்கலாம் என்பதை சிரிப்பாக கூறியிருக் கின்றார்கள். இந்த சிரிப்பு மூளைக்கும் மருந்து உடலுக்கும் மருந்து.

*

**சிறந்த மேடைப்பேச்சாளரும் கவிஞருமான தோழர் சுரேந்திரன் அவர்கள்**

ஒருவரை சிரிக்கவைப்பது என்பது சாதாரண விடயமல்ல இதனை எல்லோரும் செய்துவிட முடியாது. இதன் ஆசிரியர் துரைஸ் அவர்கள் இயற்கையிலேயே சிரிப்பாக கதைப்பார், சிந்திக் கக்கூடிய வகையில் கதைப்பார். சிரித்திரு பத்தி ரிகையில் அதன் வெளிப்பாடுகள் தெரிகின்றது.

**நியூ மெய்கண்டான் பதிப்பக அதிபரும் முன்னாள் புதுவெள்ளம் ஆசிரியருமான திரு. அரியரத்தினம் அவர்கள் படித்த கவிதை.**

நாம்....

வற்றிய குளத்தில் மீனைத் தேடும்
வசந்த காலப் பறவைகள் நாம்
வாழ்க்கையை எங்கோ தொலைத்துவிட்டு
வகையின்றித் தவிக்கும்
வறியவர்கள் நாம்
அன்பினை எங்கோ அடகுவைத்துவிட்டு
அலைந்துகொண்டிருக்கும்
அந்நியர்கள் நாம்
சிரிப்பினை எங்கோ சிதறவிட்டு
சிந்திய கண்ணீரோடு திரியும்
சிந்தனைவாதிகள் நாம்
வாழ்க்கையை மீண்டும்
வாழ்ந்திட வேண்டும்
அன்பினை மீண்டும் அடைந்திடவேண்டும்
சிரிப்பினால் உயர்ந்து சிறந்திட வேண்டும்
செயல்திறன் ஓங்கிச் செழித்திட வேண்டும்.

*

**வான்மதி பத்திரிகை ஆசிரியர் திரு. ரமேஸ் சிவரூபன் அவர்கள்.**

சிரித்திரு என்கின்ற பெயரில் பத்திரிகை வருகின் றது என்ற விளம்பரத்தை பார்த்து நான் மிகவும் சாதாரணமாக எடை போட்டேன்.

பத்திரிகையை பார்த்தபின் என் எண்ணத்தினை மாற்றிக்கொண்டேன். இந்த பத்திரிகை ஈழத்து சிரித்திரனை விட மிக தரமாக தயாரித்திருக்கின் றார்கள்.

*

**ஆசிரியர் துரைஸ்....**

ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தினருக்கு பிரேத் தியேகமான நன்றியைக் கூறியதோடு இப் பத்தி ரிகை உதவி நண்பர்களுக்கும் நன்றி கூறி ஈழ நாடு பத்திரிகை ஆசிரியர் திரு. எஸ்.எஸ்.குகநா தன் அவர்கள் தான் பத்திரிகை உலகிற்கு தனக்கு குரு என்று கூறினார். அனைவர்க்கும் நன்றி சொன்னதோடு ஐரோப்பிய வாழ் அனைவரும் இப்பத்திரிகைக்கு தங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் ஆக்கங்களையும் வழங்கும் படி கேட்டுக் கொண்டார்.

அன்பான வாசகர்களே...

கடந்த 18.04.92 இல் வசந்தம் திரையரங்கில் இடம்பெற்ற எமது 'சிரித்திரு' வெளியீட்டு விழா வில் கலந்து கொண்டு அன்பும், ஆதரவும் வழங் கிய அனைவருக்கும் 'சிரித்திரு' தனது மன மார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

**- துரைஸ் -**

# நானறிந்த மனிதர்




நானறிந்த மனிதர் 'சிரித்திரு' 2

இப்பகுதிக்கு இம்முறை ஒருவித வித்தியாசமான துறையில் உள்ள ஒருவரைப்பற்றி எழுத ஆசைப்பட்டு சிந்தித்தபோது என் எண்ணத்தில் உதித்தவர் திரு. வீல் பிரான்ஸ் அவர்கள். இவரை பாரிஸ் இல் உள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவருக்குமே நன்கு தெரியும். காரணம் இவர் ஒரு பொது நல சேவையாளன் என்பதால் மட்டுமல்ல பிரான்சில் வாழ்கின்ற அகதி அந்தஸ்து பெற்றுள்ள ஆரம்பகால இலங்கைத் தமிழர்களுக்கு இவர் ஆற்றிய சேவையின் மூலமே.

முதல் முதல் 1970 ம் ஆண்டில் கலை, கல்வி, உடற்பயிற்சி கழகம் ஒன்றினை இங்கு உருவாக்கி அரசாங்கத்தின் அனுமதியுடன் செயற்பட்டு உடற்பயிற்சிப் பிரிவில் ஒரு ஆண்டு தேர்ச்சியின் பின் சித்தி பெற்றார். சித்தி பெற்ற இவர் தன் சக்தியை தமிழ் மக்களுக்கும் இலவமாக பயன்பெற செய்யவேண்டும் என்ற நல் எண்ணத்தில் 1974ம் ஆண்டு முதல் அரசாங்க அனுமதி பெற்ற தனது கழக மூலம் பலவழிகளிலும் அதாவது இங்கு வரும் தமிழ் மகன் பூரணமான அரசாங்க அதிகாரத்ததுடன் சகல நிர்வாக அலுவலகங்களின் தொடர்புமுறைகளையும் அறிந்து அதனோடு இணைந்து செயற்பட்டு வாழவேண்டும் என்று வழிமுறைகளை எடுத்துக்காட்டிய பெருமையும் இவரையே சாரும். ஆரம்பகாலத்தில் எனக்கு இவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இரண்டு ஆண்டுகளாகத் தான் எனக்கு இவருடன் கல்வித்துறையில் இணைந்து செயற்படும் வாய்ப்பு கிடைத்தது. இருந்தும் நான் வந்த காலம் தொட்டு நம் நாட்டு மக்கள் பாராட்டிப் பேசியதை காதாரக் கேட்டிருக்கின்றேன். நம் நாட்டு மக்கள் மொழிப் பிரச்சினையால் வேலை செய்யும் இடங்களில் உரிமையாளர்களினால் பாதிக்கப்பட்ட இக்கட்டான நிலையில் இருக்கும் போது வேலை வாய்ப்பு மந்திரி சபை, நீதி பரிபாலன சபை போன்ற அலுவலகங்களில் தனது செயற்திறமையினால் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய ஊதியத்தை பெற்றுக் கொடுத்து பாராட்டும் பெற்றுள்ளார். சில நம் நாட்டு நண்பர்கள் திரு. வீல் பிரான்ஸ் அவர்கள் திறமைசாலி சேவை மனப்பான்மை உள்ளவர் உண்மை தான் ஆனால் பணம் பெற்றுத்தானே உதவி செய்கிறார் என்று கேட்டார்கள். இந்த விடயத்தை நான் கவனத்தில் எடுத்து அவரை அணுகி இது பற்றிக் கேட்டேன். நீங்கள் பணம் வாங்கித்தான் எம் நாட்டு மக்களுக்கு உதவி செய்வதாக கேட்டு இருக்கிறார்கள். இதைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று. அதற்கு அவர் கூறிய விளக்கம்

நான் ஆரம்பகாலமான 1970 ம் ஆண்டில் வசதியாக இருந்தேன். தமிழ் மக்களுக்கு இலவசமாக என்னால் சேவையாற்ற முடிந்தது. இதை யாவரும் அறிவார்கள் இன்று அப்படியல்ல... பொது ஆலோசனைக்கென்று அலுவலகம் அமைத்து வாடகை இன்னும் நிர்வாகச் செலவுகள் உட்பட அரசாங்கத்திற்கு வரி செலுத்தி செயற்படுகின்றேன். ஆகவே தான் தற்போது நான் மக்களுக்கு செய்யும் செயற்பாடுகளுக்கு பணம் வேண்டவேண்டி உள்ளது. நீங்கள் ஒரு பிரெஞ்சு வழக்கறிஞரையோ ஒரு மொழிபெயர்ப்பாளரையோ அணுகி மூன்று மடங்கு பணத்தை செலவு செய்யும் விடயத்தை நான் ஒரு மடங்கு தானே வாங்கிச் செய்கிறேன். அதுவும் தற்போது நான் 300 நூற்றாண்டுகளாக எந்தத் தமிழ் மகனும் இங்கு இது வரை வெளியிடாத தமிழ் - பிரெஞ்சு ஓடியோ நாடாவை தற்போது வெளியிட அதிக பணம் தேவைப்படுவதால் தான் அப்பணத் தொகையையும் வாங்குகிறேன். இந்த ஒலிப்பதிவு நாடா உலகம் பூராவும் உள்ள பிரெஞ்சு காலனிகளில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு பிரெஞ்சு மொழிப் பிரச்சினையை தீர்க்கபெரிதும் உதவுகின்றது. குறிப்பாக ஒன்று சொல்கிறேன். இந்த ஒலிப்பதிவு நாடா மூலம் எனக்கு ஓரளவு வருமானம் கிடைத்து உங்கள் ஆதரவும் என்றும் இருக்குமாயின் தமிழ் பேசும் மக்களுக்கு இலவசமாக கடந்த காலத்தில் ஆற்றிய சேவை போல் இலவசமாக மீண்டும் சேவையாற்றுவேன் இது உறுதி என்று கூறி முடித்தார்.

29ம். பக்கம் பார்க்கவும்



**ஒருவர்** :- என்ன சார்சலில சண்டையாம் கேள்விப்பட்டனீங்களே?

**மற்றவர்** :- ஓம், கேள்விப்பட்டனான் அதுக்கு ஆட்கள் எடுக்கினையாம் அதுதான் போய்க்கொண்டிருக்கிறன்.

- ராகு

# சினி,மா

# காதல்

இம்முறை கோடம்பாக்கம் விஜயத்தை மேற்கொண்ட நம் சினிமா நிருபர் 'தும்பி' யின் ஊசிக்காது கேட்டதை அவரது ஊன்றுகோல் எழுதுவது இதோ:

து ப் ப றி யு ம்



து ம் பு க் க ட் டை

கடன் கொடுக்காத கந்தவனம் கதை, வசனம் எழுத பஞ்சப்பட்டினி பங்கஜத்தின் பாடலுக்கு, இளைப்பாறிய இளையதம்பி இன்ரநெஷனல் மெட்டெடுத்து இசை அமைக்கின்றார் மன்னிக்கவும் அமைக்கிறார்.

ஓலிம்பிக் ஓட்டத்தில் ஒற்றைக்கால் இழந்த ஒளிப்பதிவு மேதை 'ஓ சண்ணா' பயகரமாக கமராவை கையாளுகின்றார்.

பிரபல கொலிவூட் நடிக முனி மன்னிக்கவும் மணி கௌபோய் கணபதிப்பிள்ளைக்கு இணையாக ஓ! சாறி துணையக நம் நாட்டு அவசரநாயகி இல்லை...இல்லை நவரசநாயகி நன்னிக்கிழவி நாலு வேடத்தில் நடு நடுங்கி நடிக்கிறார். அது மட்டுமல்ல நாயகி நன்னிக்கிழவி நாலு பாடல் காட்சிகளுக்கு நடுறோட்டில் நின்று நாய் பேய் ஆட்டம் ஆடி உங்களுக்கு துகிலுரிய இருக்கிறார் இல்லை திகிலை ஏற்படுத்த இருக்கின்றார்.

இப்பாடல் காட்சியின்போது நன்னிக்கிழவியின் ஆடைக்குறைப்பை கமராவுக்குள்ளால் கண்டு திரையுலகிற்குள் பிரவேசித்த ஒளிப்பதிவாளர் 'ஓசண்ணா' கமராவை கைவிட்டதனால் தயாரிப்பாளர் 'தண்ணியடி' தனக்கு பல லட்சம் ரூபா செலவு என்று தண்ணியடித்து குழம்பியதாக அப்பிடி இப்பிடி கதை அடிபடுகின்றது. அதைப் பற்றி எமக்கு பிரச்னை இல்லை என்றாலும் தொடரும் படப்பிடிப்பில் அடிபட்டவை இல்லை பிடிபட்டவை...மேலை நாடுகளில் நடக்கும் அல்லது ஓடும் கடத்தல், கழித்தல், கூட்டல், பெருக்கல், பிரித்தல் போன்ற சம்பவங்க்ஷகளை தும்புக்கட்டையின் துணை கொண்டு கௌபோய் கணபதிப்பிள்ளை பல் துலக்குவதாக இல்லை..மன்னிக்கவும் துப்புத்துலக்குவதாக படம் அமையவுள்ளதாம். நகைச்சுவை காட்சிகளில் ஊரெழு ஊசி முத்துவும், இருபாலை இளையாச்சியும் இளைக்க இளைக்க உங்களை சிரிக்க வைக்க பெரிய பிளான் போட்டுள்ளார்களாம்.

இப்படத்தை தட்டத் தனிய தனித்து நின்று தயாரிப்பவர் "தம்புசாமி பிலிம்ஸ்" அதிபர் தண்ணியடி தாமோதரம் இப்படம் இவ்வாண்டு ஒஸ்கார் விருதைப் பெறும் என்று அடித்துக் குத்திச் சொல்கிறார். இப்படத்தை இழுவல் இளையதம்பி இயக்கினாலும் இயக்குவார் என்று நம்புகிறோம்.

# சின்னக்குட்டியின் சி(ரி)றப்புப் பேட்டி

கடந்த மாதம் தமிழக முதல்வரின் பேட்டிக்காக தமிழ்நாடு சென்ற எமது நிருபர் சின்னக்குட்டி, மாலை, பிரச்சனையால் சிறைச்சாலையில் விருந்தினராக இருந்தது வாசகர்கட்கு தெரியும்.
பத்துநாளாக நடந்த பரிசோதனையில் அந்த மாலையில் எந்தவிதமான வாசனைப் பொருட்களும் இல்லை என்ற இரசாயன பரிசோதனை அறிக்கையினால் விடுதலையான சின்னக்குட்டிக்கு சிறைச்சாலை வாசலில் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது.
சின்னக்குட்டியை வரவேற்க ஒரு பத்திரிகையாளர் கூட்டமே அங்கு கூடி இருந்தது.
எல்லோருடைய கைகளிலும் மாலைகள்.
"சிறை மீண்ட சிங்கமே வாழ்க"..செல்வியை செவ்வி கண்ட சின்னக்குட்டி வாழ்க" என்ற கோசங்கள் விண்ணை பிளந்தது. முதல் மாலையை அணிவித்தவர். 'லஞ்சம்' பத்திரிகை ஆசிரியர் "தும்பு" அவர்கள். "போதுமா" பத்திரிகை சார்பில் கோபாலபுரத்தில் இருந்து மாலையும் காரும் அனுப்பியிருந்தது.
சில சிறிய பத்திரிகையாளர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சின்னக்குட்டியுடன் நின்று படமும் எடுத்துக்கொண்டார்கள். பேட்டி எடுப்பதற்கு பல நிருபர்கள் முயற்சி செய்தார்கள் இருந்தாலும் "பேட்டி எடுக்க வந்தவரிடம் பேட்டியா" என்று கூறி நமது நிருபர் அதனை தவிர்த்துவிட்டார்.
திரு. சோ அவர்களின் அன்புப்பணிப்பால் எமது நிருபர் திரு. சோவின் இல்லத்திற்கு சென்று இந்த பேட்டியை எடுத்து அனுப்பிவைத்துள்ளார். இதோ திரு. சோ வுடனான சின்னக்குட்டியின் சிறப்புப் பேட்டி

**சின்னக்குட்டி**:- "வணக்கம் திரு. சோ அவர்களே"

**சோ** :- வணக்கம் 'சிரித்திரு' சின்னக்குட்டி அவர்களே"

**சின்னக்குட்டி** :- "முதலில் தனிப்பட்ட முறையில் உங்களிடம் ஒரு கேள்வி. உங்கள் தலையை மொட்டையாக வைத்திருப்பதின் நோக்கம் என்ன ?"

**சோ**:- " எல்லா விடயங்களுக்கும் நோக்கம் வைத்துக்கொண்டா செய்யமுடியும். முதலில் நீங்கள் ஒன்றை தெரிந்து கொள்ளவேண்டும் எனக்கென்று எந்த நோக்கமும் கிடையாது. நான் எதையாவது எழுதுவேன்! மற்றவர்கள் அதற்கு ஏதாவது அர்த்தம் கொடுத்துக்கொண்டு ஏதேதோ விளக்கம் சொல்லுவார்கள். எனக்குப் புரியாமல் நான் சொன்ன விடயங்களை பல விளக்கங்கள் கூறி மற்றவர்கள் எனக்கு புரிய வைப்பார்கள் இதையெல்லாம் ஒரு நோக்கத்தோடு தான் செய்தேன் என்றா சொல்வது. அப்படித்தான் இந்த மொட்டையும் என்னுடைய தலையில் ஒன்றுமே இல்லை என்பதை வாசகர்களுக்கு இப்படி குறியீடாக (சிம்பாலிக்காக) புரிய வைக்கலாம் என்று நினைத்தேன்.ஆனால் அவர்களோ எனது தலையில் முடியே இல்லை எல்லாம் மூளைதான் என்று நினைக்கின்றார்கள். நான் என்ன செய்யமுடியும்"

**சின்னக்குட்டி**:-"எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நீங்கள் அந்தக் கட்சியை எதிர்த்தே எழுதுகின்றீர்களே ஏன்?"

**சோ**:- " நானாக எழுதவில்லை. என்ன எழுத வைக்கின்றார்கள். ஆட்சிக்கு வந்தபின் யாரும் பத்திரிகைக்காரர்களை கண்டு கொள்வதே இல்லை இப்படி எதிர்த்து எழுதுவதால் தான் சில சமயங்களில் ஆவது என்னை கவனித்துக் கொள்கின்றார்கள்.



**சின்னக்குட்டி** :- "அரசியல் கட்சிகளின் எதிர்கால நடவடிக்கைகளை முன்கூட்டியே எழுதுகின்றீர்களே ?" எப்படி?

**சோ** :- "இது ஒன்றும் பெரிய சாமர்த்தியம் இல்லை. எப்படியும் இந்த மந்திரிசபையில் மாற்றம் வரும். சிலவேளையில் அந்த இரண்டு கட்சிகளும் அடுத்த தேர்தலில் கூட்டணி அமைக்கலாம். விரைவில் இந்த ஆட்சி கலைக்கப்படலாம். இது போன்று பொதுப்படையாக எழுதிவிடுவேன். அப்படி நடந்தால் இப்படி நடக்கும் என்று நான் முன்னமே எழுதினேன் என்று பெருமையாக சொல்வேன். நடக்காவிட்டால் பேசாமல் இருந்துவிடுவேன். அவ்வளவு தான்.

**சின்னக்குட்டி** :- தமிழுக்காக நீங்கள் செய்திருக்கும் தொண்டு என்ன?

**சோ** :- தேர்தலில் போட்டியிடும் எண்ணம் எல்லாம் எனக்கு இல்லை ஆதலால் தமிழுக்கு தொண்டு செய்யும் முயற்சியில் நான் ஈடுபடுவதில்லை.

**சின்னக்குட்டி** :- ஆட்சியில் உள்ளவர்கள் லஞ்சம் வாங்குவதை தடுக்கவே முடியாதா ? இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**சோ**:- அவர்கள் லஞ்சம் வாங்குவதில் தவறே இல்லை ! லஞ்சம் வாங்கலாம் என்ற சட்டம் அமுலுக்கு வர வேண்டும் என்பதே எனது கருத்து.

16ம் * பக்கம் பார்க்கவும்






மேதின ஸ்பெஷல்:
ஒருவர்: என்ன முதலாளிமார்களெல்லாம் ஊர் வலக் கொண்டாட்டமாய் வருகினம்

மற்றவர்: தங்களிட்டை சம்பளம் வாங்கி வாழ்க்கை நடத்திற தொழிலாளியளே 'மே' முதலாம் திகதியை கொண்டாடி மகிழினம் எண்ட வயித்தெரிச்சல் தான்.

**- லோகன்-**




## செல்லாக்காசுகள்

பாரீசிற்கு வரும் பைங்கிளியே
பாரீஸ் சொர்க்கபுரிதான் - ஆனால்
பகட்டு நாகரீகங்கள்
எமக்கு வேண்டாம்.

கருநாகக் கூந்தலை
நீ வெட்டிக் குறைக்கவேண்டாம்
மான் விழிகளிற்கு
மை வேண்டாம்

நீளக்காற்சட்டை உனக்கு வேண்டாம்
காஞ்சிபுர சேலை கட்டிவா
வடிவான இதழ்களிற்கு
வாய்ப்பூச்சு வேண்டாம்

அவசியமிருந்தால்
ஆங்கிலத்தை பேசி - வா
நம் மண் தந்த
இயற்கை அழகோடு வா
செயற்கை அழகெல்லாம் - எனக்கு
செல்லாக்காசுகள்

**- மீசாலையூர் சுதந்திரன்**

## காளான்

அன்று ஈழத்தில் இருக்கும் போது . நான்
புத்திசாலித்தனமாக பேசினாலும்
நல்ல கருத்துக்களைச் சொன்னாலும்
நம் பெரியோர்கள் சொல்வார்கள்
முந்த நாள் பெய்த மழைக்கு
நேற்று முளைத்த காளான் - நீ
பேசாதே போ என்று என்னை
கணக்கெடுக்க மாட்டார்கள்
ஆனால்..இன்று
பிரான்சில் உள்ள சந்தைகளில்
காளான் விலை 32 பிராங் என்றதும்
காளான் பெறுமதியை தெரிந்து
கொண்டதாலோ என்னவோ
இப்போ எனது கதைகளையும்
கருத்துக்களையும் கணக்கெடுக்கத்
தொடங்கிவிட்டார்கள் அதே பெரியவர்கள்.





# வரவேண்டும் வசந்(கழ)தங்கள்

'SIRITTIRU'
90, PASSAGE BRADY,
PARIS - 75010
FRANCE.
TEL: 42 47 03 06

எஸ். சிவகுமார்
THRILENDROF STR 2
LUDWIES BURG 7140
GERMANY

ஆசிரியருக்கு
உமக்கு ஒரு பழமொழி தெரியுமா?
கான மயில் ஆட கண்டிருந்த வான்கோழி
தானு மதுபோல் சிறகை விரித்தாடியதாம்
அதே போல் எதையோ பார்த்து நீங்களும்
சிரித்திருவை வெளியிட்டிருக்கின்றீர்கள்.

தம்பி ஏன் எதையோ என்று சுற்ற வளைக்கின்றீர். ஏற்கனவே "என் எண்ணத்தை எழுதுகிறேன்" பகுதியில் எழுதியுள்ளேன். "சிரித்திரன்" சுந்தரைப் பார்த்துத்தான் நாம் ஆரம்பித்தோம் 'சிரித்திரு' பத்திரிகையை என்று.

எஸ். மோகன்
183 Bis RUE DE COLOMBES
NANTIER

'சிரித்திரு' படித்தேன். எங்கள் சிரித்திரனையும் மிஞ்சிவிட்டான். கணேஷின் சித்திரங்கள் புத்தகத்தின் மகுடம். பணி தொடரட்டும்.

வாழ்த்துகிறேன்

சிரிப்புக்கு சிம்மாசனம் கொடுத்து
சிந்தனையை சிருஸ்டித்து
வெளி வரும் சிரித்திருவே
நீ
தமிழ் மக்களின் மனங்களை
என்றும் மகிழ்விக்கும் வண்ணம்
வெளி வரவேண்டும்
வண்ண மலரே
வான்சுடர்விளக்கே - இவ்
வையத்தில் வளம் பெற்று
வெளிவரவேண்டுமென
வாழ்த்துகிறேன் உன்னை!

**- சி. பாலன் -**

அன்பான வாசகர்களே... 'சிரித்திரு' உங்கள் பிள்ளை இதனை வளர்த்து ஆளாக்கவேண்டிய பொறுப்பு உங்களுடையதே. உங்களிடம் இருந்து அனைவரையும் சிந்தித்து சிரிக்கவைக்கக்கூடிய ஆக்கங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.


வி.உதயகுமார்
85 RUE CRIMEE
75019 PARIS

என்னய்யா மூன்றெழுத்து உமக்கு உடம்பு எப்படி இருக்கு எங்கள் கன்னித்தாய் ஜெயலலிதாவைப் பற்றி கிண்டலாய் எழுதியிருக்கிறீர். தடா பரீஸ் வரை பாயும் மறந்துவிடாதீர். அல்லாவிட்டால் சபாநாயகர் சேட பட்டியார் பிடிவிறாந்து அனுப்புவார். சட்ட சபை கூண்டில் ஏறவேண்டி வரும் ஜாக்கிரதை பதில்: சிரிக்க வைக்கத்தான் 'சிரித்திரு' யாரும் சீரியஸ்படுத்தினால் நடப்பதைச் சந்திப்போம் தம்பி!

MISS. LOUIS JUDY GULAND
49 RUE PIERE COURT
75020 PARIS

"சிரித்திரு சிறப்பாக மலர வேண்டிய மலர் சிறு தவறுகளை சீர்திருத்தி சிறப்புடன் திகழ வாழ்த்துகிறேன்"
குறிப்பு: குறுக்கெழுத்துப் போட்டியில் இடம் மாறியுள்ள இலக்கங்கள் 6, 19 சிரித்திருக்கவைக் கவில்லை, சிந்திக்க வைத்தது.

**சோதரியே:இம்முறை அதே குறுக்கெழுத்துப் போட்டியே பிழைதிருத்தத்தோடு வருகின்றது. பரிசை தட்டிக் கொள்ளுவது யார்? உங்கள் வாழ்த்துக்கும் ஆதரவிற்கும் எம் நன்றிகள்.**



**ஆசிரியை:-** நான் மிகவும் அழகாக இருக்கிறேன் இது எந்தக்காலம் ?

**மாணவி :-** அதுஅந்தக்காலம் ரீச்சர்

**- ரி.சுஜித்தா, ஜெர்மனி**

# "ஆசை யாரை விட்டது"

நடிப்பு : சூரியன்
சந்திரன்

(சூரியன் : அழகாக உடையணிந்து பெரிய சூட்கேசுடன் பயணத்திற்கு புறப்பட்டுக் கொண்டிருக்கின்றார். அப்பொழுது அழைப்பு மணிவாசலில் அடிக்கின்றது)

**சூரியன்** :- (தலை சீவியபடி) யேஸ்..கம் இன்.

(கதவைத் திறந்துகொண்டு சந்திரன் வருகின்றார்)

**சந்திரன்**:- என்ன சூரியா தூர பயணம் வெளிக்கிட்டிட்டீர் போல தெரியுது.

**சூரியன்**:- சந்திரன் ஆசியா மக்கள் எல்லாம் என் மீது கோபமாக இருக்கின்றார்கள்.ஆதலால் ஒரு சேஞ்சிற்காக வெளிநாடு போகலாம் என்று புறப்பட்டுவிட்டேன்.

**சந்திரன்**:- என்ன ? ஆசிய மக்களுக்கு உன் மீது கோபமா. அவர்களுக்கு கோபம் வரும்படியாக நீ என்ன செய்து விட்டாய்.

**சூரியன்**:- என்னுடைய வெளிச்சம் கூடிவிட்டதாம். வெய்யில் சூடு தாங்கமுடியவில்லையாம். மரம் செடி, கொடிகளெல்லாம் எனக்கு கொடும்பாவி கட்டி எரிக்கின்றார்கள். இதனால் எனக்கு மனதிற்கு நிம்மதி இல்லை சந்திரன்.


**சந்திரன்**:- எந்த நாட்டிற்கு போகப்போகின்றீர்.

**சூரியன்**:- ஐரோப்பிய நாடுகளுக்கு போகப் போகின்றேன்.

**சந்திரன்** :- (ஆச்சரியமாக) ஐரோப்பாவா? அகதியாக பதியப் போகின்றீரா?

**சூரியன்** :- நானா ! அகதியாகவா ! குளிர்மையான காட்சிகளை காண்பதற்காக போகின்றேன்.

**சந்திரன்** :- (ஏக்கத்துடன்) உமக்கென்ன கொடுத்து வைத்த மனிதன் பாரீஸ், சுவிஸ், ஜேர்மனி, லண்டன் என்று ஜாலியாகப் போகின்றீர்...( பெருமூச்சுவிட்டு) அனுபவியும்.



**ஒருவர்** :- என்ன இது?

**மற்றவர்** :- மெத்றோ டிக்கட் தெரியாதா?

**ஒருவர்** :- தெரியாது

**ஒருவர்**:- ஒரு நாளும் மெத்றோவில் போனதில்லையா ?

**மற்றவர்**:- போயிருக்கிறன் .ஆனால் டிக்கட் வாங்கினதில்லை.

**- நந்தினி**

**சூரியன்** :- ஏன் பெருமூச்சு விடுகின்றீர். நீரும் ஒரு லீவு எடுத்துக்கொண்டு வரவேண்டியது தானே.

**சந்திரன்**:- நான் இரவினிலை போய் என்னத்தை பார்க்கிறது.


**சூரியன்**:- பகலில் அந்த மாதிரி காட்சியளை பார்க்கமுடியாது. இரவிலை தான் அப்படி குளிர்ச்சியான காட்சிகளை பார்க்கலாம்.

**சந்திரன்**:- சூரி, உமக்கு மேல்நாட்டு மங்கைகளைப் பற்றி சரியா தெரியாது போல் இருக்கு அவர்கள் பகல் நேரத்தில் வீட்டுக்கு வெளியில் தான் சந்தோஷம் அனுபவிக்கின்றவர்கள். நீர் அங்கே செல்ல குளிரும் சென்றுவிடும் மேல்நாட்டுப் பெண்கள் ஆள்பாதி ஆடைபாதியாக வலம் வருவார்கள். இளம் சோடிகள் நடு றோட்டில் முத்தம் கொடுப்பதும்...ஆ! அந்த கண் கொள்ளாக் காட்சியை காண்பதற்கு இந்த இரண்டு கண்கள் போதாது சூரியா.


**சூரியன்** :- சந்திரன் நேருக்கு நேர் பார்க்கிறதில் ஒரு சந்தோசமும் இல்லை ஒளித்து ம்றைத்து பார்ப்பதில்தான் ஒரு மாதிரியான சந்தோசம் வரும் அந்த விடயத்தில் நீர் அதிர்ஷ்டக்காரன்.

**சந்திரன்**:- ஒளித்து நின்று பார்ப்பது எவ்வளவு கஷ்டம் என்று உமக்கு தெரியாது மாட்டிக்கொண்டால் மானம் போய்விடும்.

**சூரியன்** :-அப்படியான கலைகளை தெரிந்து வைத்திருக்கவேண்டும்.



**சந்திரன்**:- இப்படித்தான் ஒரு நாள் இரவு பத்து மணி எனக்கும் ஒரு மாதிரியான மூட். ஏதாவது ஒரு சந்தோசமான காட்சியை ஒளித்திருந்து பார்க்கவேண்டும் போல இருந்தது. என்னுடைய ஏக்கத்தை புரிந்துகொண்டவர்கள் போல ஒரு இளம் தம்பதிகள் சந்தோசமான மூட்டில் இருந் தார்கள்.
**சூரியன்** :- பின்பு உம்பாடு கொண்டாட்டம் தான்!
**சந்திரன்** :- மீதி கதையையும் கேட்டால் தெரியும் கொண்டாட்ட விபரம்.
**சூரியன்** :- சரி சொல்லும்.
**சந்திரன்** :-அந்த தம்பதிகளின் சந்தோசத்திற்கு நடுவே அவர்களின் மூன்று வயது பிள்ளை உறங்காமல் விளையாடிக் கொண்டிருந்தது.
**சூரியன்**:- அடடா அப்புறம்.
**சந்திரன்**:- அந்த பிள்ளையை உறங்கவைக்க தாய் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு இருந்தாள் இறுதியில் ஒளித்திருந்து பார்த்த என்னைக் காட்டி நிலா நிலா ஓடிவா நில்லாமல் ஓடிவா" என்று பாட்டுப்பாடி பிள்ளையை உறங்கவைக்க தொடங்கி விட்டாள். மறைந்து பார்த்துக் கொண் டிருந்த எனக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட் டது. அப்படியே முகிலுக்குள் மறைந்துவிட்டேன்.
**சூரியன்**:- நீர் இப்படியான கிழுகிழுப்புக் காட்சி களை என்றாலும் பார்க்கின்றீர்கள். நாங்கள் பகலில் எதையுமே பார்க்கமுடியாது. சில வேளைகளில் சூடு அதிகமாகி வேர்க்கின்றது என்று கூறி மொட்டை மாடிகளில் சிலர் வந்து படுப்பார்கள். இப்படியே என் வாழ்நாளில் எதை யும் பார்க்காமலே இறந்து விடுவேன் போல் உள்ளது. அதனால்தான் இப்பொழுது ஐரோப்பா விற்கு செல்கிறேன்.
**சந்திரன்** :- சந்தோசம் அங்கு மேல்நாட்டுப் பெண்களின் அழகில் மயங்கி காதல் கீதல் என்று வீண் வம்புகளில் மாட்டிக்கொள்ளாமல் இருந் தால் சரி.
**சூரியன்** :- உம்மைப் போல் அழகாய் நான் இல் லையே சந்திரா.
**சந்திரன்** :- ஐரோப்பாவில் இருந்து உமது நினைவாக ஏதாவது வாங்கிவாரும்.
**சூரியன்**:- நீர் கூறிய அந்த கண் கொள்ளாக் காட் சிகள் வீடியோ சகட்டில் பதித்து வைத்திருக்கின் றார்களாம். அதனையே உமக்கு வாங்கிவருகின் றேன்.
**சந்திரன்** :- நன்றி சூரியன்
**சூரியன்**:- நோ மென்ஷன் (இருவரும் கை குலுக்கி விடைபெற்றுக் கொள்கின்றார்கள்)
- முற்றும் -
- **'சுரேந்திரன்'** -



(ஒரு காதல் ஜோடியின் முதல் சந்திப்பில்)


**காலதன்** : நீர் உண்மையில் எவ்வளவு அழகாய் இருக்கிறீர்.இந்தப் பிரெஞ்சுக்காறியள் உம்மடை நிறத்துக்கும் ஸ்ரைலுக்கும் உம்மட்டை பிச்சை வேண்டவேணும்.

**காதலி** : நீங்கள் இங்கை O.F.P.R.A கேஸ் எழு திறனீங்களோ?

**காதலன்** : எப்பிடி சரியாய்க் கண்டு பிடிச்சனீங் கள்.'

**காதலி** : இல்லை, நிறையப்பொய் சொல்லுறியள் ..அது தான்..

**- லோகு-**



**ஒருவர்** : என்ர விலாசம் தெரியுமா ? A.K.47 தெரியுமா?
**மற்றவர்** : தம்பி எனக்கு இதெல்லாம் தெரியாது. G.G ஐ தெரியும், S.J.V ஐ தெரியும்,D.S ஐ தெரியும், V.Pஐ தெரியும்.
- ராகு-


# சுமித்திரா உணவகம்

* வீடியோ கிளப் *

ஒருவர் : பாரிஸிலை அசல் யாழ்ப்பாணச் சாப் பாடு சாப்பிட எங்கே போகலாம்.
மற்றவர் : நீர் என்ன ஊருக்கு புதுசே.....தம்பி இடியப்பம், புட்டு, புரியாணி, கணவாய், நண்டு, றால், இறைச்சி, மீன் கறியோளட பனங்கள்ளு, சிலோன் சாராயம் ஒரு பிடி பிடிச்சிட்டு பீடாவும் போட்டு கையோட வீடியோப்படக்கசற்றுக்கள், பாட்டுக் கசற்றுக்கள் புத்தகங்களும் வாங்கலாம். எல்லாம் பே மலிவு....
ஒருக்கா போய்ப் பாருமன்.
ஒருவர்: அண்ணை நான் கேள்விப்பட்டனான் தான் மணிச்சாப்பாடாம் சுமித்திரா உணவகத்தில எண்டு. நான் கடை சிலோனில எண்டு நினைச் சுப்போட்டன்.
மற்றவர்: தம்பி கொர்ணஸ் மெற்றோவிலும் போகலாம். பாமந்தியர் மெற்றோவிலும் போக லாம்.
விலாசம்: 'சுமித்திரா உணவகம்'
51, RUE .J.P. TIMBAUD - PARIS 75011
TEL: 43 55 91 02

*பாரிஸ் நகரில் நம்நாட்டு உணவுகளை சுவையுடன், திருப்திகரமாக சிறந்த உபசரிப்புடன் உண்டு மகிழ்ந்திட என்றும் நாடுங்கள்!*

# சுமித்திரா உணவகம்


* வீடியோ கிளப் *




## இனியாவது
## ஒரு வழி
## செய்வோம்

நேற்று,
அம்மா, அப்பா
அம்மி, ஆந்தை
என்று மழலை
பேசிய எம் செல்வங்கள்
இன்று ,
பப்பா, டடி
பொன்சூர், சவா,
குடன்மோர்கன்
என்று புதிய
இராகம் பாடுகின்றனர்
எந்த மொழியும்
படிக்கலாம்
எம்மினிய மொழியையும்
படியுங்கள்
வெட்கமில்லை
பாதிப்பில்லை
இன்னுமொரு
மொறிசியஸ் தீவாகவோ
பிஜித்தீவாகவோ
இந்த மண்களும்
மாறவேண்டாம்.

**- செ.குணசிங்கம்.**




கண்டு பிடியுங்கள் இந்த இரு படங்களிலும் ஆகக் குறைந்தது ஆறு வித்தியாசங்கள் இருக்கின்றது.

இந்தப் புதிருக்கான விடை **18**ம் பக்கம்

**சின்னக்குட்டி** :- இது பற்றி சற்று விளக்கமாக கூறமுடியுமா ? சோ :- தேர்தலில் நிற்கும்போது ஓட்டிற்காக லஞ்சம் கொடுக்கின்றார்கள். ஆட்சிக்கு வந்தபின் சட்டபூர்வமாக பத்திரிகைகளில் அறிவித்து இலவச- செருப்பு, இலவச குடம், இப்படியெல்லாம் அடுத்த தேர்தலுக்காக இப்பொழுதே சட்டபூர்வமாக லஞ்சம் கொடுக்கின்றார்கள். அவர்கள் மட்டும் சட்டபூர்வமாக லஞ்சம் வாங்கினால் தவறா?

**சின்னக்குட்டி**:- இது தவறு என்று மக்களுக்கு நீங்கள் புரியவைக்கமுடியாதா?

**சோ**:- அப்படியான சூழ்நிலையில் எல்லாம் நாங்கள் இறங்கினால் மக்கள் எங்களை பைத்தியக்காரர் என்பார்கள். பீரங்கி வாங்குவதில் இருந்து பீப்பா வாங்குவது வரை பிரதம மந்திரியில்இருந்து கடைசி பியோன் வரை லஞ்சம் வாங்குகின்றார்கள். மக்களை வாங்கவேண்டாம் என்று எப்படி சொல்லமுடியும். சரி நாங்கள் மக்களுக்கு புரிய வைத்துவிட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள் அவர்கள் வேறு ஒரு இலவச திட்டத்தை கொண்டு வந்து மக்களுக்கு எதுவும் புரியாமல் பண்ணிவிடுவார்கள்.

தொடர்ச்சி 22 பக்கம்

வாசகர்களே !"சிரித்திரு" விற்கு நீங்கள் கடிதங்கள் எழுதும்போது உங்களது உண்மைப் பெயர், சரியான முகவரி ஆகியவற்றை எழுதுங்கள்.
ராகுவின் பதில்களுக்கு கேள்விகள் கேட்ட சில வாசகர்கள் தங்கள் உண்மைப் பெயர்களை மறைத்து புனைப் பெயர்களில் எழுதியுள்ளார்கள். பேனா நண்பர்கள் பகுதிக்கு விண்ணப்பங்கள் அனுப்பிய சிலர் அதற்குரிய விண்ணப்பக் படிவங்களை அனுப்பவில்லை. இனி வரும் காலங்களில் நீங்கள் இப்படியான தவறுகளை நிவர்த்தி செய்வீர்களென நம்புகின்றோம். ஆ-ர்

சிரித்திரு SIRITTIRU சிரித்திரு SIRITTIRU

'சிரித்திரு' சந்தா விண்ணப்ப படிவம்

வாசகப் பெருமக்களே....
உங்கள் 'சிரித்திரு'வில் நீங்களும் இணைந்து கொண்டு பங்களிப்பு செய்யுங்கள். ஒரு ஆண்டுக்கு 120 பிரெஞ் பிராங்குகள் மட்டுமே. ஒவ்வொரு மாதமும் உங்கள் இல்லங்களின் கதவை 'சிரித்திரு' தட்டும்!

பெயர் :..........................................................
முகவரி:..........................................................
..........................................................
நாடு:..........................................................
தொலைபேசி இலக்கம்:....................
(முகவரியை ஆங்கிலத்தில் எழுதவும்.)
(பணத்தைசர்வதேச காசோலையாகவோ அல்லது தபால் நிலையம் மூலமோ அனுப்பி வைக்க வு ம் )




ஒருவர்: இவ்வளவு காலமாய் கலைக்கு செய்த சேவையை பாராட்டி இவருக்கு கௌரவிச்சு பட்டம் வழங்கியிருக்கு. பிறகேன் பட்டம் குடுத்தவரோடை குழம்பிக் கொண்டிருக்கிறார்.

மற்றவர்: அது வந்து பாருங்கோ.. பட்டம் குடுத்தவை கையோட நூலையும் வாலையும் குடுக்கேல்லையாம் அது தான் இந்தக் குழப்பம்.

# 'பலே பாண்டியா'





**வாத்தியார்**- ஹலோ ! ஹலோ!! நான் முருகேசு வாத்தியார் பேசுறன்..தம்பி லோகன் இருக்கிறாரோ?

**மறுபக்கத்தில்** - அவர் இல்லை பாருங்கோ...

**வாத்தியார்** - பின்ன நீங்கள் யார் பிள்ளை பேசுறியள்...

**மறுபக்கத்தில்** - நான் அவருடைய மடம் பேசுறன்...

**வாத்தியார்** - பின்ன தம்பி லோகன் எங்கே பிள்ளை போயிட்டார்?...

**மறுபக்கத்தில்** - அவர் ஈழநாட்டுக்குப் போயிட்டார்...

**வாத்தியார்** - என்ன பிள்ளை எனக்கு ஒரு சொல்லுச் சொல்லாமல் போயிட்டார். நான் இங்க டாட்டியில, என்ரை மனுசிக்கு எண்டு மலிவான நைற்றி எல்லாம் வாங்கி வைச்சுக் கொண்டு இருக்கிறன்..தம்பி லோகன் ஒண்டும் சொல்லாமல் போயிட்டாரே.?

**மறுபக்கத்தில்** - இல்லை பாருங்கோ..அவர் இங்க உள்ள பாரீஸ் ஈழநாடு ஓப்பீசுக்கு போயிருக்கிறார் வாத்தியார்..

ஞானம் பீரிஸ்

## அன்பு

கதைகள்..கவிதைகள்....காவியங்கள்
எல்லாம்...
அன்பைப்பற்றி...
எப்படியெல்லாமோ..எடுத்துக்கூறுகின்றன.
ஆனால்...
நடைமுறையில் பார்க்கும்போது
அன்புகூட
ஒரு வித சுயநலமே...
மொத்தத்தில் -ஏதோ
ஒரு வித எதிர்பார்ப்பில்
உண்டாகும் ஆசைகளின்
வடிவம் தான் அன்பு
வடிவம்

-கணேஷ்-

## 'பாரிஸ் வீடியோ மலர் 4'

'பாரிஸ் வீடியோ மலர் 3 இல் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'வினாக்கோலம்' நாடகப்புகழ் கலைஞர்கள் பங்குபற்றும் பி. லோகதாசின்

* மலர்களில்லா மாலை (நாடகம்)
* கலையில் மலர்ந்த கவிதை (புதுமை நிகழ்ச்சி)
* நெஞ்சில் நிறைந்தவை
* கண்டதும் கேட்டதும் (செய்தித்தொகுப்பு)
* உலக செய்திகள்


இன்னும் பல

இன்னும் பல சுவையான அம்சங்கள அனைத்து வீடியோக் கடைகளிலும் கிடைக்கும்.

## நந்தினி







அன்னை மரியாளின்
அருட் சகோதரிகளின் சபையினரால்
(அடிப்படை மருத்துவமின்றி வாடும் மக்ளுக்கு)

மருத்துவ மனைக் கட்டிட நிதிக்காக
இலங்கைத்தமிழ் கலைஞர்கள்
வழங்கும்

"கலைவிழா"

காலம்: 20 யூன் 1992
நேரம்
மாலை 4.00 முதல் 6.00 மணி வரை
மாலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை

இடம்
CENTRE SOCIAL SOLIDARITE FRANCAIS MIGRANT
51 BIS, RUE DE LA ROQUETTE, 75011 - PARIS
Metro:BASTILLE அல்லது VOLANTAIRE



அதிர்ஷ்டப் பரிசுகள் மூன்று
முதலாவது பரிசு - 150 பிராங்
இரண்டாவது பரிசு - 100 பிராங்
மூன்றாவது பரிசு - 50 பிராங்
பரிசுத் தொகையை வழங்குபவர் நியூ மெய்கண்டான் பதிப்பகம் புத்தகசாலை

## குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ந | | | | | 6 கா | |
| | ■ | ■ | ■ | 12 | | |
| 15 | 16 | ■ | ■ | 19 | | ■ |
| | | 24 | 25 | ர | | |
| | | | ■ | | | ■ |
| ன் | | | 40 | ■ | வ | ■ |
| ■ | | 45 | ண் | | | ■ |
| ■ | ■ | ■ | | ■ | ■ | ■ |

இடமிருந்து வலம்
1. **பெற்ற பிள்ளைகளைக் கொன்றவள்**
12. இவரைக்கண்டால் நெருப்புக்கு சந்தோஷம்.
15. வாழ்க்கை பிடிக்காதவர்களுக்கு இந்த ஊர் பிடிக்கும்.
19. இது கிணற்றுக்குள் இருக்கும்.
25. இவர் கலகம் செய்வதில் வல்லவர்.
45. மகா பாரதத்தின் கதாநாயகன்.

மேலிருந்து கீழ்
1. தீபாவளியின் நாயகன்.
6. இரு திலகங்களில் ஒருவர் நடித்த படத்தின் பெயர்.
16. இது இப்பொழுது உங்கள் கையில்.
19. இவர் தேசிய கவிஞர்.
40. இவர் தமிழ் பேரறிஞர்.
24. கொடைவள்ளல் தலைகீழாக நிற்கிறார்.

(ஏப்ரல் - மே) அதிர்ஷ்டசாலி யார்?
முடிவு திகதி : **5.6.92**

### மன்னிக்கவேண்டும்

வாகர்களே...ஆனைக்கும் அடிசறுக்கும் என்பார்கள். அது வாஸ்தவம் தான்?...சென்ற இதழில் வந்த குறுக்கெழுத்துப் போட்டியில் இலக்கங்கள் 6,12, 19 தவறாக எமது துணை ஆசிரியர் குறிப்பிட்டு விட்டார். யார் தவறு செய்தாலும் அடியேன் தான் பொறுப்பு.ஆகவே உங்களிடம் மன்னிப்பு வேண்டி பிழை திருத்தத்துடன் மீண்டும் அதே குறுக்கெழுத்துப் போட்டியை பிரசுரிக்கின்றோம். கலந்து கொண்டு பரிசுகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

நன்றி !

பக்க புதிருக்கான விடை இதோ:

**புதிரின் விடை**

* 6 வித்தியாசம்
1) போத்தல்
2) கம்பியூட்டர்
3) மேசையின் கால்
4) ரை கறுப்பு
5) மேசையில் உள்ள இரண்டு கடித உறை
6) கலண்டர்

# இதுவும் வேண்டுமடா எனக்கு இன்னமும் வேண்டுமடா



ஒரு குடியானவன் வறுமையான சிலையில் வாழ்ந்து வந்தான். ஒரு வேளை சாப்பாட்டிற்கு கூட வழி இல்லை. ஆனால் மிகுந்த கடவுள் நம்பிக்கையுடையவன். தன்னுடைய வறுமை நிலை தெரியாததால் தான் கடவுள் தனக்க உதவி புரியவில்லை என்று எண்ணி, தனது வறுமை நிலை பற்றி கடவுளுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதனை தபால் உறையில் வைத்து ஒட்டி திரு. சிவபெருமான் விண்ணுலகம் என்று முகவரியிட்டு அனுப்பி வைத்தான்.

தபால்களை பகுதி வாரியாக பிரித்த தபாலதிபர் சிவபெருமானுக்கு முகவரியிட் கடிதத்தை ஆச்ச ரியமாக பார்த்து கடவுளுக்கு கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக கடிதத்தை பிரித்து படித்தார்.

உள்ளே நான் வறுமையின் பிடியில் சிக்கி மிகவும் கஸ்டப்படுகிறேன். எனக்கு ஏதாவது உதவி செய்யுங்கள் சிவபெருமானே இல்லையேல் இறந் துவிடுவேன் என்றும் குறிப்பிட்டிருந்தது.

கடிதம் எழுதியவரின் அறியாமையை எண்ணி மனம் வருந்திய தபாலதிபர் தன்னுடன் வேலை செய்பவர்களிடம் விடயத்தை தெரிவித்து கடிதம் எழுதியவனுக்காக நிதி சேகரித்தார். மொத்தம் கிடைத்த பணம் 73 ரூபா சேர்ந்தது. அப்ப ணத்தை வறுமையில் வாடும் குடியானவனுக்கு அனுப்பி வைத்தார்.

ஒரு வாரத்தின் பின் அதே நபரால் எழுதப்பட்டு சிவபெருமானுக்கு மற்றொரு கடிதம் வந்தது.

அதையும் தபால் அதிபர் பிரித்துப் படித்தார். அந்தக் கடிதத்தில் அந்த குடியானவன் இப்படி எழுதியிருந்தான்.


திரு. சிவபெருமான் அவர்கட்கு!

ஐயா

நீங்கள் அனுப்பி வைத்த பணத்தில் எழுபத்தி மூன்று ரூபா மட்டும் எனக்கு கிடைத்தது. நிச்ச யமாக நீங்கள் நூறு ரூபாய்க்கு குறையாமல் அனுப்பியிருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். தபாற் கந்தோரில் வேலை செய்யும் திருடர்கள் தான் மிகுதிப்பணத்தை திருடியிருப்பார்கள் என்று எழுதியிருந்தார்.

கடிதத்தை படித்து முடித்த தபாலதிபர் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார்.

- கிருபாகரன்



இசைமேதை இலைராசா

ஒரு இசைவிழா நிகழ்ச்சியை பார்த்துக்கொண் டிருந்தவர்,

இவருக்கு ஏன் இலைராசா என்ற பெயர் வந்தது?

மற்றவர்: ஆரம்பத்திலை எல்லோரும் ஆர்மோ னியத்தில் தான் இசை எடுப்பார்கள். ஆனால் இவர் பூவரசம் இலையிலை இருந்து தான் இசை எடுத்தவர் அதுதான் இலைராசா என்று பெயர் வந்தது.

- லோகு-



**ஒருவர்** : என்ன இவர் புதுப்புது வார்த்தைகளெல் லாம் பேசுகிறார் என்ன அர்த்தம் என்று உமக்கு தெரியுமே?

**மற்றவர்** : இப்படித்தான் நானும் குழம்பி அவரி டம் விளக்கம் கேட்டனான். தானும் விளங்கா மல் தான் பேசிக் கொண்டிருக்கிறன் என்று சொல்லுறார்.

- லோகன்-

வீட்டு வைத்தியம்

# கறிவேப்பிலையின் மகிமை



கறிவேப்பிலை சேருங்கள் !

கறிவேப்பிலை காடுகளிலும், மலைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் பயிராகக்கூடியது. பெரும் செடி இனத்தை சேர்ந்தது. எனினும் மக்கள் இதனைச் சிறுமரம் என்றே அழைக்கின்றார்கள்.

இதன் வேறு பெயர்கள்:
கரு வேப்பிலை, கறிய கருவேம்பு

இதன் குணம் வாந்தியை நிறுத்தும், உணவிற்கு மணமூட்டும், விஷக்கடியை முறிக்கும், சீரணத்தை உண்டு பண்ணும், வாய்வைப் போக்கும், சீத பேதியை நிறுத்தும், வயிற்றுப் பொருமலைப் கண்டிக்கும், முடி உதிர்வை தடுக்கும், பித்தத்தை தணிக்கும் கறி வேப்பிலையில், நாட்டுக்கறி வேப்பிலை காட்டுக் கறிவேப்பிலை என்னும் இருவகை உண்டு. நாட்டுக்கறி வேப்பிலை உணவாகவும், காட்டுக்கறி வேப்பிலை மருந்தாகவும் பயன்படுகிறது. கறி வேப்பிலையின் ஈர்க்கு, பட்டை, வேர் முதலியன உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இதன் இலை உணவுக்கு மணமூட்டும் தன்மை உடையது. இதனால் பண்டைக் காலம் முதல் மக்கள் காய் கறிகளுடன் சேர்த்துக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

கறி வேப்பிலையை துவையல் செய்து சாப்பிட்டால் வாய் கசப்பு, பித்தம், வாய் நீர் ஊறல் ஆகியன குணமாகும். கறி வேப்பிலையுடன் இஞ்சி, பச்சைக் கொத்தமல்லி, எலுமிச்சப்பழச்சாறு சேர்த்து அளவாக உப்பிட்டு உணவுடன் கலந்து உண்டால் வாய்வு கலையும்.

கறி வேப்பிலையால் குமட்டல், சீத பேதியால் வரும் வயிற்றுழைவு, நாட்பட்ட காய்ச்சல் ஆகியன நீங்கும்.


கறி வேப்பிலையை நிழலில் உலர்த்தி அத்துடன் மிளகு, உப்பு,சீரகம்,வேர்க்கொம்பு முதலியவற்றை தூள் செய்து சாதத்தோடு இப்பொடியைச் சேர்த்தால்மந்தபேதி, மலதோஷம், மலக்கட்டு, பிரமேகம் போன்ற நோய்கள் குணமாகும்.

இதன் இலை, பட்டை, வேர் இவற்றைக் கசாயம் செய்து குடித்தால் பித்தம் நீங்கும். வாந்தியும் நிற்கும்.

கறிவேப்பிலைத் துவையல் குடல் நோயுள்ளவர்களுக்கு பயனளிக்க வல்லது. இது குடலுக்கு வலுவூட்டும். பத்தியச் சமையலில் கறிவேப்பிலைத் துவையலுக்கு தனியிடமுண்டு. உணவிற்கு மணமூட்டியபின் நீக்கிவிட வேண்டியதில்லை. அதனையும் சேர்த்து உண்பதே சிறந்தது. இதனால் ஜீரண உறுப்புக்களில் உண்டாகும் குறைகளை இக்கீரை நீக்கிவிடுகின்றது. நல்லபசி, சுவை, சீரண சக்தி ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது. இயற்கை வழங்கும் மூலிகைச் செல்வங்களில் கறிவேப்பிலை முன்னணியில் திகழ்கின்றது.

**- டாக்டர்.வி.ரி.இளங்கோவன்**






*இசைப்பிரியர்களே....*
*உங்கள் மங்கள வைபவங்களா? கலை நிகழ்ச்சிகளா?*
*அழைத்து மகிழுங்கள் பாரிஸ் "இளையநிலா" இசைக்குழு*

குரு : 46 36 49 28 தெய்வா : 47 20 32 01



**ஆசிரியர்** : இரவில் சூரியன் ஏன் தெரிவதில்லை?

**மாணவன்** : இருட்டாக இருப்பதால் தெரிவதில்லை.

- மஞ்சுளர், கொலம்பஸ்

**16**ம் ..பக்க தொடர்ச்சி....

**சின்னக்குட்டி** :- இந்த இலவசங்களை முன்பு ஆட்சியில் உள்ளவர்களும் செய்தார்களே தானே அப்படியானால் இந்த இலவச லஞ்சங்களை வாங்கிய மக்கள் முன்னைய ஆட்சியை தோற்க வைத்தது துரோகமில்லையா?

**சோ** :- அந்த ஆட்சியை விட இந்த ஆட்சியில் உள்ளவர்கள் அதிக லஞ்சம் தருவார்கள் என்று, இவர்களுக்கு வாக்களித்து ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள். சிலவேளை அடுத்த தேர்தலில் இன்னும் கூடுதலாக நாங்கள் லஞ்சம் தருவோம் என்று கூறினால் அவர்களை ஆட்சியில் வைப்பார்கள். எல்லாம் லஞ்சத்தில் தான் இருக்கின்றது.லஞ்சம் வாங்குவதோ கொடுப்பதோ எங்கள் நாட்டில் குற்றம் இல்லை.

**சின்னக்குட்டி**:- சில முதல்வர்களை மிகவும் கடுமையாக எதிர்க்கின்றீர்களே இதற்கு ஏதாவது தனிப்பட்ட காரணம் உண்டா ?

**சோ**:- அப்படி எல்லாம் ஒன்றுமில்லை சில முதல்வர்களை எப்படி எதிர்த்தாலும் எங்களுக்கு எந்த ஆபத்தும் வராது. அதேபோல் சில முதல்வர்களை எதிர்த்தால் எங்கள் பத்திரிகை காரியாலயத்திற்குள் குண்டர்கள் புகுந்து தாக்குவார்கள். எமது சக தொழிலாளர்களை கொலை செய்வார்கள். பத்திரிகை வெளியிடமுடியாதபடி கரண்டை கட் பண்ணுவார்கள். அப்படியும் வெளியிட்டால் தங்கள் கட்சிக்காரரை வைத்து எமது புத்தகங்களை கடையில் இருந்து பறித்து எரிப்பார்கள். பொலிசாரைவிட்டு தொல்லைகள் கொடுப்பார்கள். சில வேளைகளில் உள்ளேயும் வைப்பார்கள். சில முதல்வர்கள் இப்படி எல்லாம் செய்யமாட்டார் . தமது பத்திரிகையில் பதில் எழுதுவதோடு நிறுத்திவிடுவார்கள். நாங்களும் வசதி உள்ள இடத்தில் தானே எங்கள் திறமையை காட்டவேண்டும்.

**சின்னக்குட்டி**:- மலிவுவிலை மது ஒழிப்பு கள்ளச்சாராய ஒழிப்பு இவை எல்லாம் மக்களுக்கு மகிழ்ச்சியான விடயம் தானே?

**சோ** :- பதிலுக்காக வேண்டுமானால் அவர்களுக்கு மகிழ்ச்சி என்று சொல்லலாம். உண்மையில் இது அவர்களுக்கு கவலையான விடயம். மக்களுடைய அன்றாட உணவில் மதுவும் ஒன்று. இன்று மலிவான மது கிடைக்காததால் மக்கள் உயர்ந்த விலை மதுவை குடிக்கின்றார்கள். நாளைக்கு மலிவுவிலை சாப்பாடெல்லாம் மக்கள் சாப்பிடக்கூடாது. கேக், புரியாணி போன்ற உயர்வுவிலை சாப்பாட்டைத்தான் மக்கள் கண்டிப்பாக சாப்பிடவேண்டுமென்று சொல்லுவார்கள். இப்படியான தவறுகள் நடக்க மக்கள் அனுமதிக்கக்கூடாது.

**சின்னக்குட்டி**:- அப்படியானால் , கள்ளச்சாராயம், மலிவுவிலை மது இவை எல்லாம் பாவனைக்கு வரவேண்டும் என்று கூறுகின்றீர்களா ?

**சோ**:- மலிவு என்ன மலிவு. அரசு இதனையும் மக்களுக்கு இலவசமாகவே கொடுப்பது தான் நல்லது.

**சின்னக்குட்டி**:- உங்களுடைய கொள்கைதான் என்ன அது பற்றி சற்று விளக்கமுடியுமா?

**சோ**:- கொள்கையா ? அப்படி பெரிய விடயம் எல்லாம் என்னிடம் இல்லை. மற்றவர்கள் கேட்பதற்கு சரியான பதிலைச் சொல்லி நானே என்னை புத்திசாலியாக காட்டிக்கொள்கிறேன் . சில சமயங்களில் நான் சொன்னதையே மற்றவர்களும் சொன்னால் இந்த விடயத்தில் என்னுடன் அவர்கள் ஒத்துப் போகின்றார்கள் என்று சொல்வேன். இப்படி சொல்வதின் மூலம் அவர்கள் தான் என் பக்கம் வருகின்றார்கள் என்று மக்களுக்கு புரியவைப்பேன்.

(எமது நிருபர் சின்னக்குட்டியாருக்கு தலை சுற்றத்தொடங்கியது, ஒரு கிளாஸ் தண்ணீரை மடக் கென்று குடித்து சமாளித்து)

**சின்னக்குட்டி** :- கடைசியாக ஒரு கேள்வி துக்ளக் பத்திரிகை பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன

**சோ** :- துக்ளக் வாசகர்கள் நல்ல அறிவாளிகளாகவே இருக்கின்றார்கள் என்பதை பார்க்கும் போது எனக்கே பெரு மகிழ்ச்சியாக இருக்கின்றது.

**சின்னக்குட்டி**:- ஏன் இப்படி கூறுகிறீர்கள் ?

**சோ**:- எனது துக்ளக் பத்திரிகை ஐந்து லட்சம் புத்தகங்களுக்கு மேல் விற்பனையாகின்றதே,

சோவின் பதில்களால் எமது நிருபருக்கு மயக்கம் தெளியவில்லை.அதன்பின் ஒருவாரகாலமாக எமது நிருபர் மயங்கிவிழுந்துவிட்டார். அதன்பின் ஒருவாரகாலமாக சித்தப்பிரமையாக வேறு இருந்திருக்கின்றார். பேட்டியை அனுப்பிவைத்த சின்னக்குட்டி கடைசியாக எமக்கு எழுதிய குறிப்பு சோ நல்ல அறிவாளி பைத்தியத்தை தெளிய வைக்கமாட்டார். மற்றவர்களையும் பைத்தியமாக்கிவிட்டிடுவார்.

குறிப்பு:- சின்னக்குட்டியார் தற்சமயம் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அடுத்த இதழில் சின்னக்குட்டியார் சீரான நிலைக்கு வந்தால் யாராவது ஒருவரை இந்தப் பக்கம் அழைத்து வருவார்.



கனடாவில் வசிக்கும் சிவநேசன்- ஜெயந்தமதி தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி கௌதமி தனது 3 வது பிறந்த தினத்தை கடந்த மாதம் அன்பு அம்மா, அப்பா , உற்றார், உறவினர்களு டன் சிறப்பாகக் கொண்டாடினார்.

# மலர்களே மலருங்கள்!

பாரிஸில் வசிக்கும் திரு. க. மகேந்திரம் அவர் களின் செல்வப்புதல்வி ம.மகின்ஷ னா தனது 3வதுபிறந்த நாளை கடந்த மாதம் இந்தியாவில் அன்பு அம்மா நந்தினியுடனும் மற்றும் உற்றார், உறவினர்களுடனும் இனிதே கொண்டாடினார்.

**பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றது உங்கள் 'சிரித்திரு'**




கலைஞர் எம்.பி.பரமேஷ் மாலினி பரமேஸ் தம்ப தியின் புதல்வி : சிமோன் துர்க்காஷினி 21.04.1992 அன்று தனது 5வது பிறந்த நாளைக் கொண்டா டினார்.






சென்ற மாத இதழின் தொடர்ச்சி....

அது மாத்திரமல்லை வயித்துக்குள்ளை போன சமாதான நீதிபதியும் சுந்தரண்ணைக்கு உசுப் பேத்திக்கொண்டிருக்கிறார்.
"சும்மா விசர்க்கதை கதையாதையுமப்பா ஆரன் வந்தால் கறிக்கடை எண்டெல்லே சொல்லப் போறாங்கள்."
மேசையிலை கிடந்த மீன் முள்ளுகளை கூட்டித் துப்பரவாக்கிக் கொண்டு வீட்டை ஒழுங்குபடுத் தினார் சுந்தரண்ணை.
வீடுவாசல் சுந்தரண்ணை சரியான கவனம். அவ்வளவு வடிவாகத்தான் வைச்சிருக்கிறார் வீட்டை.
"சுந்தரண்ணை (F) பெ்ஃபீம் அடிச்சா சரியாப் போயிடும்." இது கதிர்காமு.
"ஏன் (F) பெ்ஃபீம் எல்லா ஜன்னலையும் துறந்து விடுங்கோ" இது கார்த்திகேசு.
ஆனால் ஒருத்தற்றை கதைக்கும் காது குடுக் கேல்லை சுந்தரண்ணை. ~~மாலை~~கடையில வாங் கியாந்து வைச்ச கரிக்கட்டியையும் சாம்பிராணித் தாளையும் எடுத் தார். கரிக்கட்டியை நெருப்பிலை புடிச்சு தண லாக்கி சாம்பிராணித்துாளை எடுத்து சாதுவாய் போட்டார். சும்மா குபு குபு எண்டு புகை எழும் பிச்சுது.



**ஒருவர்** :- அண்ணா நான் ஒரு பத்திரிகை ஆரம் பிக்கப்போகின்றேன் இலகுவாய் மக்களை சென் றடையக்கூடியமாதிரி பொருத்தமாக ஒரு பெயர் சொல்லுங்கோ பார்ப்பம். அதுவும் புதுமையாய் இருக்கவேணும்.

**மற்றவர்**:- ஓகோ ! அப்படியெண்டால் இப்படி வையும் பேரை "இது தாண்டா பேப்பர்"

**- வண்ணையூரான்-**

அடுத்த போத்தில் சமாதான நீதிபதியும் திறபட் டிட்டார்.
"கூழைக்குடிச்சுப்போட்டு உதைச் செய்யலாம் தானை" கதிர்காமும், கார்த்திகேசுவும் ஒத்து ஊதினார்கள். இருந்தாலும் தான் செய்யிறது சரி தான் எண்டபடி சுந்தரண்ணை மூண்டறைக்கும் சாம்பிராணி புகையை சாமிக்கு அபிசேகத்திற்கு காட்டுற மாதிரி மாத்தி மாத்தி போட்டார்.
கூழ் கம கம எண்ட மீன் வாசனையோடை கத கத எண்டு கொதிச்சுக் கொண்டிருக்கு.
போத்தில் முடிஞ்சா கூழிலை துவங்கலாம்.
போத்திலும் முடிஞ்சுது.
எல்லாருக்கும் சுப்பர் ஏத்தம்.
"மச்சான் கூழுக்கு இது காணாது என்னு மொண்டு எடுப்பம்" கார்த்திகேசு கதிர்காமு வின்ரை காதுக்குள்ளை முணுமுணுத்து அடையான் கடை திறந்திருக்கும் போய் டக்கெ ண்டு ஒண்டு எடுத்துக்கொண்டு வா". கார்த்தி கேசர் சொல்லி முடிக்கேல்லை கதிர்காமு கத வைத் திறந்து கொண்டு போட்டார்.
போன அவசரத்திலையும் வெறியிலையும் , கத வைக்கூட பூட்டேல்லை.
சுந்தரண்ணை சாம்பிராணித்தூள் முடியாமல் புகைக்கிற வேலையை விட மாட்டார் போலை கிடக்கு, வீடு முழுக்க ஓரே புகை.
சந்திரா காணும் எண்டு சொல்ல, இன்னம் கூடப் போட்டுக் கொண்டே இருக்கிறார்சுந்தரண்ணை.
வீடு முட்டின புகை மெதுவா கதிர்காமு திறந்து விட்டு போன கதவு வழியாலை வெளிப்படிக் கட்டு வரியாக வெளியேறத் தொடங்கியது.
அங்கை நிதானமாய் நிண்டஒரு ஆள் சந்திரா தான். சந்திரா புகையை வெளியாலை போகப் பண்ணிறதுக்காக குசினி ஜன்னலை திறந்துவிட வாசல் பக்கக் கதவாலை இன்னும் வேகமாய் புகை வெளியாலை போக...இப்ப படிக்கட்டெல் லாம் ஓரே புகை.
வீட்டுக்குள்ளை கொஞ்சம் புகை குறைஞ்சிட் டுது! மீன் மணமும் தான்.
விஸ்க்கி எடுக்கப் போன கதிர்காமு சமாதான நீதவான் இல்லாமல் வலண்டயனோடை இரைக்க இரைக்க ஓடி வந்தார்.
ஏதோ சொல்ல வெளிக்கிடுகிறார் திக் கெண்டு வாயுக்குள்ளை வருகுதில்லை.
"என்ன கதிர்காமண்ணை ஓடி வாறியள்" ! சந்திரா மெதுவாக கேட்டார்.
"சுந்தரண்ணை வீட்டுக்கு போட்ட சாம்பிராணி புகை முழுக்க வெளிப்படிக்கட்டுக்குள்ளை தான் நிக்குது கீழ் வீட்டு சனம் எல்லாம் ஆற்றையோ வீடு தான் எரியுதெண்டு பொம்பியேக்கு ரெலி போன் பண்ணிப்போட்டுநிக்கிறாங்கள்இப்ப பொம் பியே வரப் போகுது" மூச்சிரைக்கக் கூறினார் கதிர்காமர்.
"என்ன பொம்பியேக்கு ரெலிபோன் பண்ணிப் போட்டாங்களோ ? நான் என்ரை வீட்டுக்கை புகைச்சா அவங்களுக்கென்ன" மனசுக்குள்ளை சின்னப்பயம் இருந்தாலும் அதை வெளிக்காட் டாமல் கதைச்சார் சுந்தரண்ணை.
"இக்கணம் பொம்பியே வந்தா அவங்கள் வந்து போன காசெல்லாம் கட்ட வேணும்" சந்திரா புறுபுறுத்தாள்.

**26**ம் பக்கம் பார்க்கவும்)




தம்பி....யூட்....,தம்பி றோய்ஸ்...பேனா நண்பர் பகுதியில் சேரவிரும்புவது மகிழ்ச்சிக்குரியதே. ஆனால் நிபந்தனையின்படி 'சிரித்திரு'வில் உள்ள கூப்பனை இணைத்து அனுப்பாதமை வேதனைக்குரியது. இருப்பினும் உங்களை ஏமாற்ற விரும்பாத 'சிரித்திரு' முதல் முறையாகையால் பிரசுரிக்கின்றது.
(கூப்பனை காணவில்லை. உங்கள் கொப்பன் (நண்பன்) கொண்டு சென்று விட்டாரோ?)



அன்புள்ள நண்பரே !
1)பெயர்: SEBMALAI ANTON JUDE
முகவரி: C/O KEETHAPONKLAN
5 IMPSSE CROZATIER
75012
பிறந்த திகதி : 02.06.1970
பொழுதுபோக்கு: கவிதை வரைதல், கட்டுரை வரைதல், பேனாநண்பருக்கு கடிதம் வரைதல்.




2) பெயர்: ROYCE DAMIEN.S
முகவரி: C/O SIMON RENGALLI
194 RUE MARCADET
75018 PARIS.
பிறந்த திகதி : 06.11.1973
பொழுதுபோக்கு: டான்சிங், பாடுவது,,புத்தகம் வாசித்தல், பேனா நண்பருக்கு கடிதம் வரைதல்.

பேனா நண்பராக சேர விரும்புவோர்
உங்கள் வதிவிட அனுமதிப்பத்திர (விசா)
போட்டோ பிரதியுடன் , உங்களின்
சிறிய அளவு புகைப்படத்தையும் இணைத்து
கீழேயுள்ள கூப்பனை நிரப்பி அனுப்பவும்.

அன்புள்ள நண்பரே

பெயர்:........................................................
முகவரி:........................................................
........................................................
பிறந்த திகதி: ........................
பொழுதுபோக்கு:........................................................
........................................................



**ஒருவர்** :- மலிவாக கிடைக்குதென்று அண்ணை வெறும் கல்லுக்காணியை வேண்டியிருக்கிறீங்கள் வெடி வைச்சு கல்லுக்கிளப்பி வளமாக்க லட்சக்கணக்கிலையெல்லே செலவு வரப்போகுது.
**மற்றவர்** :- விசர் பொடியா மழையை நம்பி விதைக்கிற மாதிரி மேலை பார் பொம்பர் பறக்குது அதை நம்பித்தான் இந்தக் காணியை வாங்கி இருக்கிறன்.
**ஒருவர்** :- என்னண்ணை சொல்லுறீங்கள் ?
**மற்றவர்** :- நீ சரியான ரியூப்லைற்தான் சின்னக் கூடாரம் ஒண்டை இந்த இடத்தில அடிச்சுவிட்டால் பொம்பர் வந்து குண்டைப் போட்டு கல்லைக் கிளப்பிவிடும் விஷயம் முடிஞ்சுது.
- உதயன்



24ம் பக்க தொடர்ச்சி

"எடி சும்மா இரடி விசரி அவங்களுக்கு வேறை வேலையில்லை இவை ரெலிபோன் அடிச்ச உடனை இஞ்சை தான் வரப் போறாங்கள்" தான் சாம்பிராணி புகைச்சதை மறைக்க சந்திராவை வெருட்டினார் சுந்தரண்ணை.

அவர் சொல்லி வாய் மூடேல்லே..பீம்...பீம்..பீம்.. என்று தூரத்தில் பொம்பியேயின் விசில் சத்தம் கேட்டது.

எல்லாருக்கும் விளங்கிவிட்டது பொம்பியே இங்கை தான் வருகுதெண்டு.

சுந்தரண்ணைக்கு கை கால் எல்லாம் உதறத் துடங்கீட்டுது சாம்பிராணி புகைச்சதுக்கு ஃபைன் கட்டவேண்டி வருமோ எண்டு.

காத்திகேசுவும் சந்திராவும் எல்லா ஜன்னலையும் திறந்துவிட்டிட்டு காட்போட் மட்டையளை எடுத்து விசுக்க விசுக்க கொஞ்சம் கொஞ்சமா புகை வெளியாலை போட்டுது.

கதிர்காமர் நெருப்புத்தணலை தண்ணி ஊத்தி வித்து பூவலை கிளறி அடிக்குள்ளை மறைச்சிட்டார்.

இதுக்கிடையிலை பீம்...பீம் கத்தியபடி இரண்டு பொம்பியே லொறி சுந்தரண்ணையின்ரை வீட்டு அப்பாட்மெண்டிற்கு கீழை வந்திட்டுது.

அது மாத்திரம் இல்லை மூண்டு பொலிஸ் கார், வேறை எக்கச்சக்கமான சனம் இதை விடுப்புப் பார்க்க.

இதுக்குள்ளை இஞ்சை சுந்தரண்ணைக்கு குலப் பனடி பயத்திலை இன்னும் கொஞ்சப்புகை வீட்டுக்குள்ளை நிக்குது" இதை வைச்சுக் கண்டு புடிச்சிடுவாங்களோ." தன் பாட்டிலை முணுமுணுத்தார் சுந்தரண்ணை.

டட்,டட், டட்....டட் வீட்டுக்கதவு பட பட என்று தட்டப்பட்டது.

"எங்கடை வீட்டை இருந்துதான் புகை வருகுதெண்டு அவங்களுக்கு தெரிஞ்சு போச்சு அதுதான் கதவை தட்டுறாங்கள்."

சந்திரா பயத்திலை முணுமுணுத்தாள்,

காத்திகேசர் துணிவாக கதவைத் திறந்தார். இரண்டு தீயணைக்கும் படை அதிகாரிகள்.

"இசீ...நெ ப்பா(F)புருளே" ஒருவன் கேட்டான்.

"நோ மிசு." சாதாரணமாக இங்கை ஒண்டுமில்லையெண்டு சொன்னார் கார்த்திகேசர்.

கதவில் சோக்கட்டியால் ஒரு புள்ளடியிட்டு விட்டு அடுத்தவீட்டு கதவைத் தட்டினார்கள் அவர்கள்.

அப்பொழுதுதான் அவர்களுக்கு விளங்கியது அவர்கள் குறிப்பாக தங்கள் வீட்டிற்கு வர வில்லை எல்லா வீட்டிற்கும் சென்று கேட்கிறார்கள் என்று.

கதவை பூட்டி விட்டு வீட்டிற்குள் இருந்த மிச்சப் புகைகளையும் காட்போட் மட்டையால் விசுக்கி வெளியேற்றினார்கள் எல்லோருமாக.

இப்பொழுது வீட்டிற்குள் புகை என்ற நாமமே இல்லை. சுந்தரண்ணைக்கு கொஞ்சம் மனத் தெம்பு வந்திட்டுது இனி அடிச்சுக் கதைக்கலாம் எண்டு.

டட்...டட்...டட்..மீண்டும் கதவு தட்டப்படும் சத்தம்.

"நாங்கள் தான் இல்லை எண்டு சொல்லிப்போட்டம் பேந்தேன் வாறாங்கள்" இது சந்திரா.

கார்த்திகேசு கதவை திறக்க எந்தக் கேள்வியும் கேட்காமல் இரண்டு தீயணைக்கும் அதிகாரிகள் அவர்களை விலக்கிக்கொண்டு வீட்டுக்குள் வந்தார்கள்.

இஞ்சை புகைச்சதெண்டு தெரிஞ்சு போச்சோ. சுந்தரண்ணைக்கு மனப்பயம்.

"நெப்பா புறப்பிளம்". ஒருவன் கேட்டான்.

"நோ...சவா..." சுந்தரண்ணை நெளிந்தார்.

"டக்கோ"..அவர்கள் வெளியே போனார்கள்.

சுந்தரண்ணை எட்டிப்பார்த்தார். அவர்கள் இப்பொழுது எல்லா வீடுகளிற்குள்ளும் போய் பார்க்கின்றார்கள்.

"அப்பாடா எங்களிலை அவங்களுக்கு ஐமிச்சமில்லை" பெருமூச்சுவிட்டார் சுந்தரண்ணை.

கதவைத் சாத்திப் போட்டு உள்ளுக்கை வந்தார் சுந்தரண்ணை. கதிர்காமர் வாங்கியந்த வலண்டையின் ஒரு மூலைக்கை பக்குவமா கிடக்குது. எடுத்து கலக்காமல் ஒரு கிளாஸ் அடிச்சார் இப்பத்தான் கொஞ்சம் துணிவு வந்திது.

"எங்கடை வீட்டிலை நாங்கள் புகைச்சா இவங்களுக்கென்ன" இப்ப கெட்டித்தனமாய் கதைச்சார் சுந்தரண்ணை.

கதிர்காமரும் காத்திகேசரும் ஒரு றவுண்ட்... போக எல்லாரும் பழைய நிலைக்கு வந்திட்டினம்.



**முத்து** :- நம்ம ராமுவை அம்புலன்சில் கொண்டு போகின்றார்கள்.

**சுப்பு** :- ஏன் அவன் உடம்பிற்கு என்ன ?

**முத்து** :- அவனுடைய மனைவியை அவன் அடித்துவிட்டானாம்.

- ரி.சுஜித்தா, ஜெர்மனி

# வட்டிக்கார வரதர்

லோகு



என்ன வரதர் லூாட்ஸ் கோவிலுக்கு வந்திருக்கிறீங்கள் ஏதேனும் நேத்தியோ?




காசு வட்டிக்கு வேண்டின ஒருத்தன் இண்டைக்கு மூண்டு மாதமா வட்டி த்ராமல சுத்துவிட்டுக்கொண்டு திரியுறான்.



அதுதான்

அவன் லூாட்ஸ் மாதாவிட்டை வாறதாய்க் கேள்விப்பட்டனான். இந்த லூாட்ஸ் மாதாவுக்கு முன்னாலை வைச்சே அந்த மாதாவை அமத்தப் போறன்.



"இஞ்சேரப்பா அவங்கள் லொறியிலை இருந்து எங்கடை யன்னல் பக்கமாக ஏணியை கொண்டாறாங்களப்பா" ஜன்னலால் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த சந்திரா புருசனுக்கு கூறினார். "சிலவேளை அவங்கள் மீற்றர் வைச்சுப் பார்க்க அவங்களுக்கு இஞ்சை தான் புகைச்சு தெண்டு தெரிஞ்சிருக்கும்" தனக்கு தெரிஞ்சது மாதிரி கார்த்திகேசர் சொன்னார்.

"சிலவேளை உண்மையாயும் இருக்கும்" இது கதிர்காமர். சரியாக இரண்டாவது மாடியில் இருக்கும் இவர்களுடைய யன்னலுக்கு வந்த ஸ்ரெச்சர் ஏணி றிமோட் கொன்றோல் மூலம் டக்கெண்டு மூண்டாவது மாடி யன்னலுக்கு மேலே போனது. ஏணி வழியாக மேலே ஏறி ஜன்னலை உடைத்து உள்ளே சென்று திரும்பிய ஒருவன் இல்லை என்று கீழே இருந்த அதிகாரிகளுக்கு கூறினான். பின்பு விசாரித்ததில் தான் தெரிந்தது அன்று மேல்வீட்டில் ஒருவரும் இல்லை எல்லோரும் வெளியே போய்விட்டார்கள். ஆதலால் அந்த வீட்டிற்குள் இருந்து புகை வந்திருக்குமோ என்ற சந்தேகத்தில் ஜன்னலை உடைத்து உள்ளே போய் பார்த்திருக்கின்றார்கள் அவர்கள்.

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயென்பார்கள் அதுபோல் அவர்கள் எதைச் செய்தாலும் இவர்களுக்கு பயமாகவே இருந்தது. இப்பொழுது நேரம் ஐந்துமணி.

மூன்று மணிக்கு வந்த பொம்பியே ஐந்து மணிக்குத்தான் அந்த இடத்தை விட்டு புறப்பட்டது.

மூண்டு போத்தல் முடிஞ்சுது குடிச்சதெல்லாம் பொம்பியே வந்ததோடை முறிஞ்சு போச்சு.

காச்சின கூழ் அடுப்பிலை ஆறிப்போய் கிடந்தது. அதை சூடாக்கச் சொல்லிப் போட்டு அடுத்த போத்திலுக்கு கார்த்திகேசனை அனுப்பினார் சுந்தரண்ணை.

கூழ் குடிக்காமலேயே இண்டைக்கு ஒரு கலக்கு கலக்கிப் போட்டுது எல்லாருக்கும்.

இனிமேல் சுந்தரண்ணை கூழ் காச்ச மாட்டார். அப்பிடிக் காச்சினா? சாம்பிராணி புகைக்கமாட்டார். ஆருக்குத் தெரியும் சாம்பிராணி புகைக்க பொம்பியே வருமெண்டு.

முற்றும்

அன்பின் ஆசிரியருக்கு


ஈழத்தின் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் அபிமானம் பெற்ற சிரித்திரன் இன் சாயலில் தங்கள் சிரித்திரு சிரிப்பதற்கு மட்டுமல்ல சிந்திக்கவைக்கும் பாங்கு அருமை.

ஈழத்தில் 'சுந்தர்' இன் ஓவியத்திற்கு ஈடாக கணேஷ் ராஜ் இன் ஓவியம் பிரமாதம்.

கவுண்டமணிக்கு காய்ச்சல் என்றால் இங்கே வாழும் தமிழர்கள் ஆஸ்பத்திரிக்குப் போவார்கள். குஷ்பு முழுகாமல் விட்டால் இங்கே தாடிவளர்ப்பார்கள். இப்படியான ஐரோப்பிய தமிழர்களின் சூழ்நிலையில் 'சிரித்திரு' ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இறுகிப் போன சிந்தனைகளை இளக்கி, நீடூழிவாழ வாழ்த்துகிறேன்.

ஈழநிதி
பிரான்ஸ்



ஒருவர்: ஏன் அண்ணை சிரித்திரு புத்தகம் படிக்கிறீங்க, முகத்திலை சிரிப்பை காணேல்ல

புத்தகம் படிப்பவர்: எவ்வளவு சொகுசா பென்ஸ் காரிலை கொண்டு வந்து பிரான்சுக்குள்ள சேர்க்கிறம். இந்த புத்தகத்தில போடர் பாஞ்சுதான் வரவேணும் எண்டு எழுதியிருக்கினம்.

சென்ற மாத சிரித்திரு அட்டைப்பட சிரிப்புக்கு எமது வாசகரின் எதிர் சிரிப்பு வெடி.
- சண்முகநாதன்-

பெயர்:..............................................
பிறந்த திகதி:......................................
முகவரி:............................................
..............................................

'சிரித்திரு சிறுவர்களே'
கடந்த மாதம் பிறந்த நாளை கொண்டாடிய 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் உங்கள் படத்துடன் உள்ள கூப்பனையும் இணைத்து அனுப்பினால் நாம் இலவசமாக பிரசுரிப்போம்.

# கலைச் சோலை

## வாழ்த்துகிறோம்

பாரிஸ் நகரிலிருந்து வெளிவரும் "பாரிஸ் முரசு" வார பத்திரிகை வெளியீட்டுவிழா அண்மையில் பாரிஸ் நகரில் நடைபெற்றது. பத்திரிகையின் ஆசிரியர் திரு. ஏ. ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், பத்திரிகையை பிரபல எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் வெளியிட்டுவைக்க அதன் முதற் பிரதியை யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் திரு. இரத்தினசிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

ஐரோப்பிய மண்ணிலிருந்து மற்றுமொரு பத்திரிகையாக இப்போது மலர்ந்துள்ள " பாரிஸ் முரசு" பத்திரிகை இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் என்று அதன் ஆசிரியர் திரு. ரகுநாதன் அவர்கள் இவ்வெளியீட்டுவிழாவில் குறிப்பிட்டதை "சிரித்திரு" பாராட்டுவதுடன், "பாரிஸ் முரசு" பத்திரிகையை வாழ்த்தி வரவேற்கின்றது.

8ம்..பக்கத் தொடர்

வீல் பிரான்ஸ் ஆலோசனை இல்லத்தில் தற்போது பிரெஞ்சு - தமிழ் வகுப்புக்கள் இசை வகுப்புக்கள், பரதநாட்டிய வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றது. சித்திரம், கவி, இசை, உடற்பயிற்சி என்று பல துறைகளிலும் விற்பனரான இவர் புதுவையை பிறப்பிடமாகக் கொண்டு பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வருகின்றார். எல்லோரும் அன்பாகவும், சமாதானமாகவும், ஒற்றுமையாகவும், மொழி, மத, இன, வேறுபாடின்றி வாழவேண்டும் என்பதற்காக "உலகக் கோவில்" ஒன்றை ஏதாவது ஒரு நாட்டில் அமைக்கவேண்டும் என்று ஒரு பெரிய திட்டத்தையும் கூறினார். நல்லதைச் செய்யும் வல்லோர் வரிசையில் இடம் பெறும் திரு. வீல் பிரான்ஸ் அவர்களின் "உலகக் கோவில்" திட்டமும் வெற்றி பெற்று, அவரின் ஏனைய நல்முயற்சிகளும் வெற்று பெற்று தொடர்ந்து பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ் மக்களுக்கு அவர் சேவை கிடைக்கவேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**பாரிஸ் வீடியோ மலர்**

பாரிஸ் வீடியோ மலர் 5ல்
இடம்பெறவிருக்கும்
**பாட்டுக்குப் பாட்டு**
வேடிக்கை வினோத நிகழ்ச்சியில்
கலந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள்
உங்கள் பெயர்களை
**சசி வீடியோ விஷனில்**
பதிவு செய்துகொள்ளவும்
64, RUE LOUIS BLANC,
75010 PARIS.
Tel: 40 38 31 78
Mo: LA CHAPELLE ou GARE DU NORD

**CAFPI**
PRÊTS IMMOBILIERS
66, AV. LOUIS-ARAGON - 93000 BOBIGNY

நீங்கள் வாங்கும் வீட்டுக்கு
நாங்கள் கடன் ஒழுங்கு செய்கின்றோம்.

*சகல தொடர்புகளுக்கும்*
*தமிழில் 48 65 95 65*

# மறக்க முடியுமா?



சமுதாயத்தை சமத்துவமாக மாற்றியமைக்க வேண்டும் என்று மேடைகளிலும் பத்திரிகைகளிலும் பலர் முழங்கி வந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

ஆனால் நான் அறிந்தவரையில் விளம்பரம் இன்றி இதனை செயல் முறையில் நடைமுறைப்படுத்தி வந்தவர் காத்தார் என்றும் கார்த்தி என்றும் எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் கார்த்திகேசன் மாஸ்ட்டர் அவர்கள் தான்.

நான் பத்து வயது சிறுவனாக இருந்த காலத்தில் காற்ச ட்டைக்கு சரியாக ஊசி கூட குத்தாமல் ஒரு கையால் காற்சட்டையை பிடித்துக்கொண்டு மறுகையில் நட்சத்திரம் பொறித்த சிவப்புக் கொடியை பிடித்துக்கொண்டு எங்கள் சேகன் கார்த்திகேசன், ஏழைகள் தோழன் கார்த்திகேசன் என்று கத்தித் திரிந்த காலங்களையும் மறக்கமுடியவில்லை. இளம் தளிர்களின் இதயங்களிலும் தோழனாக இடம் பிடித்தவர் எங்கள் கார்த்தி கேசன் மாஸ்ட்டர்.

என்னுடைய வீட்டிற்கு அருகாமையில் (நாச்சிமார் கோவிலுக்கு அருகில்) இவர் வசித்த காலத்தில் மாலை நேரத்தில் இவர் இல்லத்திற்கு பல மாணவர்கள் பாடம் படிக்க போவார்கள். அவர்கள் எல்லோரும் ஏழைமாணவர்களாகத்தான் இருப்பார்கள். இந்த் மாணவர்களிடத்தில் ஒருசதமேனும் இவர் ஊதியமாக வாங்கியது கிடையாது.

கல்வி கற்பதன் மூலமே சமுதாயத்தில் முன்னுக்கு வரமுடியும் என்று சொல்வதோடு நிற்காம ல் தன்னால் இயன்றவரை அதனை செயற்படுத்தியும் வந்தவர் எங்கள் கார்த்திகேசன் மாஸ்டர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டுமே கல்வி பயில முடியும் என்ற நிலை ஒரு காலத்தில் இருந்தது.

இவர் அதிபராக இருந்த காலத்தில்தான் அந்தக் கொடுமை ஒழிக்கப்பட்டு அனைத்து சமூகத்தினருக்கும் கல்விகற்க பாதை அமைத்தவர்.

இளம் வயதில் என்னை எழுதத்தூண்டியவரும் இவர் தான். எனது 'சாட்டை' பத்திரிகை வெளியீ ட்டு விழாவிற்கு தலைமை தாங்கி திரு. கே. டானியல் அவர்களுக்கு முதல் பிரதியை கொடுதது விற்பனையை ஆரம்பித்து வைத்தவரும் என் பெரு மதிப்பிற்குமுரிய காத்திகேசன் மாஸ்டர்.


தன் சொந்தப் பணத்தில் கட்சிக் காரியாலய வாடகைப்பணம் உட்பட ஏழை மாணவர்களுக்கு பாடப்புத்தகம் வாங்கிக் கொடுத்தது போன்ற பல சம்பவங்களை நான் பலமுறை நேரில் பார்த்து நெகிழ்ந்தது உண்டு.

அப்படிப்பட்ட அந்த உயர்ந்த மனிதன் இறுதி வரைக்கும் வாடகை வீட்டிலேயே தன் வாழ்வை கழித்தார். ஏழைகள் மத்தியிலும் தோழர்கள் மத்தியிலும் நீங்காத இடம் பெற்றிருந்த அந்த மேதைமறைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு வட்டுக்கோட்டையில் இருந்த அவரின் இல்லத்திற்கு ஓடோடிச் சென்றேன்.

அவர்களோடு இருந்த தோழர்களை அங்கு காணவில்லை! அவரிடத்தில் உதவி பெற்றவர்களை அங்கு காணவில்லை! அவர்கள் எல்லோரும் மறுநாள் மந்திரி பீட்டர் கெனமன் அவர்கள் வந்தபோது தாங்களும் வந்து முகங்களை மந்திரிக்கு காட்டிக்கொண்ட வேதனையை அங்கே கண்டேன்.

ஆனால் தோழமைக்கு முன்னோடியாக உதாரணமாக வாழ்ந்து மறைந்த தோழர் கார்த்திகேசன் என்ற அந்த உயர்ந்த மனிதனை மறக்கமுடியுமா?

வண்ணை தெய்வம்



**கணவன்** : என்ன சாப்பாடு இது மனுசன் சாப்பிடுவானா?

**மனைவி** : மனுசன் தானே சாப்பிட ஏலாது சரி..சரி.நீங்க சாப்பிடுங்கோ.

அனேகரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
விரைவில்
மீண்டும் திரையரங்கில்.....

# விடுதலை பாதையில்

ஐரோப்பாவில் முதல் தமிழ் வீடியோ படமான தனிப்புறா படத்தை தயாரித்த ஞானம் பீரிஸ் அவர்களுக்கு தனிப்புறா படத்திற்கு கிடைக்காத பெரும் ஆதரவு விடுதலைப் பாதை படத்திற்கு கிடைத்திருக்கின்றது. இதுவே படத்திற்குக் கிடைத்த முதல் வெற்றி. ரசிகர்களை படம் ஏமாற்றவில்லை. மாறாக, ரசிகர் களின் எதிர்பார்ப்பிற்கும் மேலாக படம் தரமாக அமைந்திருந்தமை ரசிகர்களிற்கு வியப்பையே ஏற் படுத்தியது. இவ்வளவு தரமாக செய்திருக்கின்றார்களே என்ற வியப்பை, ரசிகர்களிடம் காண முடிந்தது.



திரு. ஞானம் பீரிஸ்

படத்தின் கதாநாயகன் என்று கூறுமளவிற்கு இசையமைப் பாளர் பஞ் அவர்களே எல்லோர் மனதிலும் நிறைந்திருக்கிறார். நடிகர்கள் எல்லோரும் தங்கள் பாத்திரங்களை உணர்ந்தே நடித் திருந்தார்கள். குறிப்பாக, இரா. குணபாலன், கணேஷ்ராஜா. சண்முகநாதன், நீலாட்சி, சிவ சுப்ரமணியம் ஆகியோர் அந்தந்த பாத்திரமாகவே மாறிவிட்டார்கள் என்றே கூறவேண்டும். வளரும் கலைஞர்களுக்கு இந்தப்படம் ஒரு பாடப்புத்தகம் போன்றுள் ளது.

சிரித்திரு

ஹைரோன் பஞ்ச் அவர்களின் இசை அமைப்பில்
இலங்கையில் முதன் முதலாக தமிழ் இசைத் தட்டு தயாரித்து
பல பாடல்களை இயற்றி, இசையமைத்து பாடிய உங்களின் அபிமான...

**எம்.பி.பரமேஸ் அவர்களின் புத்தம் புதிய பாடல்கள்**
விரைவில்
உங்கள் கைகளில் C.D இசைத்தட்டுக்களில்

சிறந்த பாடகர்களை -1 பஞ்ச் 40361625 ஜெர்மன் பரமேஸ் 02161, 643365 அழைக்கின்றார்கள்



* உயிரோடு உறவாடும் எந்தன் காதலி(எம்.பி.பரமேஸ்- பஞ்ச்)
* ஒரு தேவதை வந்தாள் ( எம்.பி.பரமேஸ்)
* வானம் வந்த வெண்ணிலா (எம்.பி.பரமேஸ்)
* மழையடிக்குது, மழையடிக்குது (எம்.பி.பரமேஸ்)
* துஷ்தா நீ என்னை நேசித்தா (எம்.பி.பரமேஸ்)
* அந்தக்கால பறவைகளில் ஒன்று (எம்.பி.பரமேஸ்)
* ஓடாதே எந்தன் வான்மதி (எம்.பி. பரமேஸ்)
* உன்னைத்தான் உன்னைத்தான் (எம்.பி.பரமேஸ்)

எம்.பி.பரமேஸ் , மாலினி பரமேஸ், பிரபாலினி பரமேஸ், ஹைரோன்
பாடிய பாடல்கள் ஹைரோன் பஞ்ச் அவர்களின் இசையில் வெளிவருகின்றது.

# ஈழநாடு பாரிஸ்

42, AV. LOUIS ARAGON, 93000 BOBIGNY, FRANCE.
TEL: (1) 48 95 02 12 FAX:(1) 48 95 01 78

**ஈழத்திலும், மற்றும் உலகெங்கும்
நிகழும் செய்திகளை உடனுக்குடன்
பக்கம் சாராது தருகிறது**

வாசகர்கள், விளம்பரதாரர்கள்
நலன் கருதி
பாரிஸ் நகரில்

ஈழநாடு விளம்பர அலுவலகம்
90, PASSAGE BRADY 75010 PARIS
Mo: Chateau d'Eau ou Strasbourg St Denis

அன்றும்.....இன்றும்....இனி என்றும்.....
தரமான மொழி பெயர்ப்பை
விரைவாக செய்து பெற்றுக்கொள்ள
நாடுங்கள்.......

## மாஸ்ரர்

மொழிபெயர்ப்பு சேவை

– 42463722 –
90, PASSAGE BRADY 1ம் மாடி
PARIS 7510, FRANCE. ★★★

ஐரோப்பாவில்
மற்றுமோர் தமிழ்இலக்கிய இதழ்
'சிகரம்'

ஈழத்தின் முன்னணி எழுத்தாளரும்,
பத்திரிகையாளருமான
வி.ரி. இளங்கோவன் அவர்களை
ஆசிரியராகக் கொண்டு
பாரிஸிலிருந்து வெளிவரவிருக்கிறது.

ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

## சிகரம்

CHIKARAM
90, PASSAGE BRADY
PARIS 7510, FRANCE.